உ
வாழ்க உலகெலாம்

ஞானசம்பந்தம்

[தருமை ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 20 } பிலவ - வைகாசி 10—6—61 { இதழ் 7

உ
திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

தருமை காட்டும் திருநெறி

தேவே மதுரைநகர்ச் சிற்பரனே எவ்வுயிர்க்கும்
கோவே யெனையாளும் கோவேஎன்—நாவே
உனைத்துதிக்கச் சிந்தை உனைநினைக்க என்றும்
கனத்தில் உனைவணங்கக் காண்.

—சொக்கநாத வெண்பா

உலகிற்கு அவ்வப்போது அருளாளர்கள் புரிந்துவரும் உபதேசங்கள் பல. அவற்றால் உண்மை உணர்ந்து உலகு பயன்பெறும்; இன்புறும். அந்நெறி நின்று சமுதாயம் வாழும்; நிலைக்கும். அந்நெறி மாறித் துன்பெய்தும் நிலையும்

சமுதாயத்திற்கு வாராமல் இல்லை. தமிழ்ப்பெருஞ்சான்றோர்களும், மெய்ஞ்ஞானியரும் அருளிய திருநெறி, பெருநெறியாக நின்று உலகை இன்றும் வாழ்விக்கின்றது. சமயத் தலைவர்கள் காட்டிய நெறிநின்று தோத்திர சாத்திர மெய்ம்மையில் உலகு கண்ட விழுப்பயன் பெரிது; அப்பயனை இன்று தேவாரமாகக் காண்கின்றோம். அவர்கள் வளர்த்த தமிழ் இறைமையெனும் அமிழ்தோடு குழைந்த இன்பத் தமிழாகும். அத்தமிழமுது தன்னை உண்டார் உயிர் வளர்த்து உணர்வு பெருக்கிச் ‘சிவமெனுந் தேவு’ செய்யும் செம்மை உடையது. ஆதலின் அதனைத் திருநெறி என்றும், அது காட்டும் தமிழைத் ‘திருநெறிய தெய்வத் தமிழ்’ என்றும் கூறுதல் உலக உண்மை எனலாம். இத் தமிழ் மாநிலத்தில் இந்நெறி காட்டும் செந்நெறியாளர்கள் அருள்தவம் பெருக்கும் ஞானச்சாலைகளே ஆதீனங்கள். தருமையாதீனத்தில் இவ்வாண்டுக் குருபூசைத் திருநாளையொட்டி 26—5—61 முதல் 5—6—61 வரை நிகழ்ந்த திருநெறிய தெய்வத் தமிழ் மாநாட்டினை உலகம் நன்கு உணர்ந்து போற்றும். ஆம்; தருமை காட்டும் திருநெறியை உலகம உணர இம் மாநாடு நல்ல உறுதுணையாயிற்று.

கல்வித்துறையிலும் சமயத்துறையிலும் தலைசிறந்து நிற்கும் அறிஞர் அனைவரும் இம்மாநாட்டிற் பங்குகொண்டனர். திருநெறிநின்று தெய்வத்தமிழ் குறித்து விரிவுரையாற்றினர். மற்றுமொரு பெருஞ்சிறப்பு. மாநாட்டினையொட்டி நாள்தோறும் காலை 10 மணி முதல் சைவசித்தாந்த விரிவுரை - சிவஞானசித்தியார் வகுப்புத் தொடங்கி நடைபெற்றது. சித்தாந்தப் பெரும்புலமை உடையோர் தம் ஆராய்ச்சி நலம் கனிந்த நல்லுரைகளை வழங்கினர்; கேட்போர் உளங்கொள்ள விரிவுரையாற்றினர்.

‘அருட்கண்ணால் எதனையும் காணவேண்டும். அவ்வருட் கண்ணைக் காட்டுபவனும் இறையவன். அவ்வருட்கண்ணாலேயே அனைத்தையும் நோக்குதல் வேண்டும். அதுவே நாட்டமாய் நடக்கப் பழகவேண்டும். எவ்வேவற்றைச்

சிந்தித்தாலும் திருவருட் சிந்தனையாக இருத்தல் வேண்டும். எவ்வேவற்றைப் பேசினாலும் திருவருட் பேச்சாக இருத்தல் வேண்டும். எவ்வேவற்றைச் செய்தாலும் திருவருட் செயலாக இருத்தல் வேண்டும். இத்திருநெறியே தருமை காட்டும் திருநெறி. இவ்வாதீன முதற்பெருங்குரவர் ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளிய சிவபோக சாரத் திருநெறி :

ஏதேது செய்திடினும் ஏதேது பேசிடினும்
ஏதேது சிந்தித் திருந்திடினும்—மாதேவன்
காட்டிடுவதான அருட் கண்ணைவிட்டு நீங்காது
நாட்டம் அதுவாய் நட.

'அருளால் எதையும் பார் என்று குருநாதன் உபதேசம் நானே என் சிற்றறிவால் காண முற்பட்டேன். எங்கும் ஒரே இருளைத்தான் கண்டேன். அதுமட்டுமா? கண்ட என்னையும் காண இயலவில்லை. இது என்ன மாயம்' என்று தாயுமானவர் உபதேசிக்கின்றார். 'நின் அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே' என்கிறது திருமுறை. அவனருள் துணையின்றி இவ்வருட்பார்வையும் கிட்டாது. 'எல்லாம் சிவன் செயல் என்று எண்'ணுக என்பது முதற்பெருங் குரவர் அருள்வாக்கு.

இந்நெறியின் விளக்கமாகச் சாத்திர, தோத்திர பேருரைகள் இந்நாட்களில் நிகழ்ந்தன. அடிப்படை இது தான் ; அதன்மேல் அறிவுலகச் சிற்பிகள் எழுப்பிய கருத்து மாளிகை விண்ணையளாவிற்று ; விண்ணுற நிமிர்ந்தது. கனகாபிஷேகங் கொண்டருளிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத்தின் திருவருள் வீறுடன் திகழும் இத் தெய்வ மாளிகை தருமைகாட்டும் திருநெறிக் கூடமாகத் திகழ்கின்றது என்பது மெய்யன்பர்களின் அநுபவம்.

பாராட்டுரைகள்

திரு. எஸ். ஏ. ஐயாசாமி செட்டியார் அவர்கள் B. A., B. L.,

இங்கே பேசுவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. இருந்தாலும்கூட இந்த நிகழ்ச்சியில் பங்கெடுத்துக்கொள்வது பற்றி நான் மிக்கமகிழ்ச்சி அடைகின்றேன். அதற்குப் பல காரணங்கள் உண்டு. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுடைய கருணைக்குப் பாத்திரமான அன்பர்கள் இந்தக் கனகாபிஷேக விழாவிற்கு ஏற்பாடுசெய்தார்கள். அவர்களுக்குப் 'பின்னணி யிலே நானும் இருந்து ஏதோ கொஞ்சம் வேலை செய்தேன். மகாசந்நிதானம் அவர்களுக்கும் எனக்கும் ஒரு பன்னிரண்டு பதின்மூன்று வருஷமாகத் தொடர்பு உண்டு. உத்தியோக முறையிலே எனக்குப் பணம் அதிகமாக வேண்டியிருந்தது. அப்பொழுது மகாசந்நிதானத்திடம் வந்தேன். ஒரு லட்சம் ரூபாய்க்குமேல் கொடுத்தார்கள். அதாவது நான் தேசீயசேமிப்பு அதிகாரியாக இருந்த காலத்தில் மகாசந்நிதானம் அவர்களிடத் திலே பணத்துக்காகச் சென்றிருந்தேன். அப்பொழுது என்னு டைய வாழ்க்கையில் நடந்த இரண்டொரு நிகழ்ச்சிகளைமாத்திரம் சொல்லிவிட்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கின்றேன்.

மகாசந்நிதானம் அவர்களைப் பார்க்கவேண்டுமென்று ஒரு நாள் வந்தேன். அப்பொழுது வழியிலே அந்த மருத்துவ நிலை யத்தில் மகாசந்நிதானம் அவர்கள் கார் நின்றுகொண்டிருந்தது. அப்பொழுது நான் பார்க்கவேண்டுமென்று என்னுடைய விசிட்டிங்கார்டைக் கொடுத்தனுப்பினேன். மகாசந்நிதானம் அவர்கள் மடத்துக்குப்போய் இருங்கள் ; வருகிறேன் என்றார் கள். உடனே வந்தார்கள். வந்தவுடன் என்னை அங்கே கூட்டிக்கொண்டு போனார்கள். அதுதான் அங்கே முதல் தடவை மடத்துக்கு வந்தது. மடம் மிகவும் கம்பீரமான நிலையில் இருந் தது. அமைதியாகவும் சுத்தமாகவும் இருந்தது. அங்கே உள்ளே போகும்போது ஒரு வழக்கமான விஷயம். ஏனென்றால் இந்தக் கூட்டத்தில்தானே சொல்லவேண்டும் வழக்கமான விஷ யத்தை; மகாசந்நிதானத்தைப் போய் எப்படி நமஸ்காரம் செய் வது என்று யோசனைசெய்துகொண்டுபோனேன். அப்பொழுது மகாசந்நிதானம் அவர்களைப் பார்த்தவுடனே 'கண்டாரைப்

பிணிக்கும் பொன்னர் மேனியர்' என்று நமது பாலசுப்பிரமணிய அய்யர் அவர்கள் சொன்னதுபோலத் தோன்றிற்று. சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்துகொண்டேன்.

ஆனல் நான் அதிகமாகத் திருநீறு பூசுவதில்லை. மகா சந்நிதானம் அவர்கள் எனக்குத் திருநீற்றின் பெருமையைப் பற்றியும் என்னைப்பற்றியும் என்ன நினைத்தார்களோ தெரியவில்லை. கடவுளைப்பற்றி தினமும் ஏதாவது கொஞ்சநேரமாவது நினைக்கவேண்டும் என்று ஒரு இருபது நிமிஷம் உபதேசம் செய்தார்கள். நான் கடைசியில் அவர்கள் சொன்னதையெல்லாம் கேட்டுக்கொண்டு, "நான் மற்றவர்களுக்கு என்னல் ஆன உதவியைச் செய்வதுதான் கடமையாக நினைத்துக்கொண்டிருக்கிறேன். கோயிலுக்குத் தினமும் போகவேண்டுமென்ற தீவிரக் கொள்கையில்லை. கூடுமானவரையில் இவ்வாறு செய்கிறேன்" என்று உறுதிகூறினேன். மகாசந்நிதானம் அவர்கள் இந்தக் கனகாபிஷேகத்திற்கு எந்த வகையில் தகுதியானவர்கள் என்பதைப்பற்றி நான் சொல்லித் தெரியவேண்டியதில்லை. அவர்களைப் பார்த்தவர்கள் - அவர்களைப்பற்றிக் கேட்டவர்கள் அவர்களால் பிணைக்கப்பட்டுவிடுகிருர்கள்.

மகாசந்நிதானம் அவர்கள் ஆலயத்திருப்பணியோடு நின்றுவிடாமல் சமயப்பிரசாரத்திலே அதிகமாக ஈடுபட்டிருக்கின்றார்கள். அவர்களுடைய ஆட்சிக்கு முன்னல் இருந்த மடாதிபதிகள் எல்லாம் ஆலயத் திருப்பணியோடு தங்களுடைய செயல்களை நிறுத்திக்கொண்டார்கள். ஆனல் இவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு ஒரு புதிய வியாக்கியானம் ஏற்பட்டது. அவர்கள் செய்துவரும்படியான பணிகளைப்பற்றி என் நண்பர் பாலசுப்பிரமணியம் போன்றவர்கள் மிகவும் பாராட்டிப் பேசினர்கள். சமயப் பிரசாரத்திற்காக மாத்திரமல்ல. மொழிக்காகவும் அவர்கள் அதிகமாக வேலை செய்துவந்திருக்கின்றார்கள். சமயத்தையும், மொழியையும் இரண்டு கண்களாகப் பாவித்து அவ்விரண்டையும் வளர்த்துவந்திருக்கின்றார்கள். அது மிகவும் பாராட்டத்தக்கது. அதுமாத்திரமல்ல. நம்முடைய நாட்டிலே சமூகவளர்ச்சிக்காகவும், நாட்டின் வளர்ச்சிக்காகவும் மகாசந்நிதானம் அவர்கள் அதிகமாகப் பாடுபட்டுவருகின்றார்கள், அதிகமாக நான் பேச விரும்பவில்லை. மகாசந்நிதானம் அவர்களுடைய பணிகள் எப்போதும் போல் முன்னேறி மக்களுக்குப் பயன்படும் முறையிலே மகா சந்நிதானம் அவர்களுக்குப் பல்லாண்டு ஆயுள் அளிப்பாராக என்று இறைவனைப் பிரார்த்தித்துக்கொள்கின்றேன். வணக்கம்

டாக்டர். திரு. ரத்தினவேலுசுப்பிரமணியம் அவர்கள்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களே, சபையோர்களே, பெரியோர்களே, தாய்மார்களே நான் முதன்முதலில் மகா சந்நிதானத்தைச் சந்தித்தது சென்ற ஆண்டு நடராஜ தரிசனத்திற்குச் சிதம்பரம் வந்தபொழுது. அப்பொழுது குருமகா சந்நிதானம் அவர்கள் கூத்தப்பெருமானுக்கு உருத்ராட்ச கண்டிகை ஒன்று அளிக்கப்போகிறுர்கள். அதற்குமுன் குருமகா சந்நிதானம் அவர்களைத் தரிசனம் செய்யலாம் என்று என் நண்பர் டாக்டர் அரங்கசாமி அவர்கள் தெரிவித்தார். அதற்கு முன்பாகக் குருமகாசந்நிதானம் அவர்களைப்பற்றிப் பேசியிருக்கின்றேனே தவிர, அவர்கள் நேராக அறிமுகம் கிடையாது. இருந்தாலும் இப் பெரியவர்கள் பல நன்மைகளைச் செய்து வருகிறுர்கள் என்று எனக்கு நன்ருகத்தெரியும். அதனுல் குருமகா சந்நிதானம் அவர்களைப்பார்க்க மிகுந்த அவாவுடன் சென்றேன்.

குருமகாசந்நிதானம் அவர்களைப் பார்த்தவுடனேயே என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு விட்டார்கள். ஏனென்ருல் அவர்கள் எடுத்தவுடனேயே என்ன பேச ஆரம்பித்தார்கள் என்ருல், அப்பர்பெருமான் கூத்தப்பெருமானைப்பற்றிப் பாடிய பதங்களைச் சொல்லி அதற்கு அர்த்தத்தையும் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். அவ்வளவுதான்; அரைமணிநேரம் சென்றது. அரைமணிநேரம் சென்றதாகவே தெரியவில்லை, நேரம் கழிந்தது, தாம் போவோம் என்ருர்கள். போவதற்கு முன்பாக கண்டிகையைக் காட்டினுர்கள். அதில் சிவசிவ என்று எழுதியிருந்தது. இதில் என்ன இருக்கின்றது தெரியுமா என்ருர்கள். சிவசிவ என்று எழுதியிருக்கின்றது என்றேன். அதை எப்படிப் படித்தாலும் சிவசிவ என்றே இருக்கிறது. அதுதான் நீங்கள் எல்லாம் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயம் என்ருர்கள்.

நான் அப்பொழுது குருமகாசந்நிதானம் அவர்களிடம் ஒரு வேண்டுகோளைக் கேட்டுக்கொண்டேன். "ஞானசம்பந்தம் என்று பத்திரிகை போடுகின்றீர்களே, என்னைப்போலத் தமிழ் அறியாதவர்களுக்கு ஒவ்வொரு தேவாரப்பாடல்களை ஒவ்வொரு வார்த்தையாக இப்பொழுது சொன்ன அப்பர் தேவாரப் பாடல்களின் அர்த்தத்தை எழுதிப் பதிப்பித்தால் என்னைப்போன்றவர்களுக்குப் பயன்படும்" என்று கேட்டுக்கொண்டேன். மாணிக்கவாசகப் பெருமானே 'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுக' என்று சொல்லுவார். என்னைப்போன்றவர்கள் தேவாரப் பாடல்

களைப் படித்தால் பொருளை உணராமல் அல்லவா நாங்கள் பாடுகின்றோம். உங்களைப் போன்ற பெரியவர்கள் அதை எங்களுக்குச் சற்றுத் தெரிவித்தால் நலமாக இருக்குமென்று கேட்டுக்கொண்டேன்.

குருமகாசந்நிதானம் அவர்கள் ஆதரவில் நடந்துகொண்டிருக்கும் ஆலயப்பணி உங்கள் எல்லோருக்கும் தெரிந்ததே. வைத்தீசுவரன்கோயிலுக்கு நான் சென்றபொழுது அதிலிருந்த சுத்தத்தைக் கவனித்தேன். இம்மாதிரியல்லவா ஒவ்வொரு ஆலயமும் இருக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றியது. ஏனென்றால் எனக்குச் சுத்தம் மிகவும் அவசியமென்று இளம் பருவத்திலேயே போதிக்கப்பட்டதனால் இப்படியும் ஆலயம் வைத்திருக்கக்கூடும் என்று அவர்கள் காட்டிவருகிறார்கள். வைத்தீஸ்வரன்கோயிலுக்கும் மற்றும் உள்ள அவர்களுடைய ஆதரவில் இருக்கும் திருக்கடவூர் கோவிலுக்கும்சென்றிருந்தேன். அங்கேயும் அப்படித்தான் இருந்தது. அதனால் அவர்களைப் போன்ற பெரியார் நம்மிடையில் இருப்பது மிகவும் சிறந்தது. அவர்களுக்குக் கனகாபிஷேகம் செய்வது என்று என் நண்பர் தெரிவித்தபொழுது நான் அப்பெரியாருக்குக் கனகாபிஷேகம் செய்யும்பொழுது அதைக் காண்பதற்கு எனக்கும் ஒரு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொண்டேன். அதன் பயனாக இன்று கண்கொள்ளாக் காட்சி ஒன்றைக் கண்டு பூரித்து இங்கு நிற்கிறேன். வாழ்க திருமடம். வாழ்க ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம்.

திருமதி. சௌந்தரம் கைலாசம் அவர்கள்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுடைய திருவடிக்கமலங்கட்கும் தவத்திரு சுவாமிகள் அனைவருக்கும் அமைச்சர் பெருந்தகை அவர்களுக்கும் பெரியோர்களுக்கும் என்னுடைய வணக்கம்.

அரனறிந்த முதுமொழி ஒன்று என் நினைவிற்கு வருகின்றது. "பள்ளம் தாழுறு புனலில்கீழ் மேலாக, பதைத்துருகும் அவர் நிற்க என்னை ஆண்டாய்....." என்று இறைவனைப் பார்த்து மணிவாசகப்பெருமான் பேசுகின்றார். அதேபோலத்தான் ஆழ்ந்து படித்த பலர் இருக்க, அறிவும் அனுபவமும் குறைந்திருக்கும் என்னை இங்குப் பேசுமாறு கட்டளையிட்டார்கள். இங்கு எதையும் பேசிவிடலாமென்று எண்ணி நான் வந்திருக்கிறேன் என்பதைக் கூறி அந்தவாய்ப்புக்கிடைத்தமை குறித்துப்பெருமைப்படுகிறேன்; பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஆயிரம் பிறை கண்டவரைக் காண்பது எத்தனை அருமையோ அதைவிட எவ்வளவோ அருமையான கனகாபிஷேகம் செய்து கொள்ளுகின்ற பெரியார் ஒருவரைக்காண்பது. முன்பெல்லாம் பிறநாட்டின்மீது படையெடுத்துச்சென்று அந்த நாட்டினை வென்று தன்னுடைய ஆட்சிக்கு உட்படுத்தி வெற்றி முரசுகொட்டி கொடிநாட்டிவிட்டுவந்த பேரரசர்கள் மட்டுமே கனகாபிஷேகம் செய்துகொண்டார்கள் என்று வரலாற்றிலே படிக்கின்றோம். செல்வத்தைத் தண்ணீர்போல செலவழிக்கின்ற அளவு சக்தி பெற்றிருந்தோர்கள் மட்டுமே கனகாபிஷேகம் செய்துகொண்டது ஒருவேளை மரபாக இருந்திருக்கும்போலும்! ஆனால் இன்று மன்னர் மற்றவர் என்ற வேறுபாடு இன்றி எல்லோருமே இந் நாட்டு மன்னராகத் திகழுகின்ற இன்றைய நிலையில் கனகா பிஷேகம் செய்துகொள்ளுகின்ற தகுதியினை உடையவர் யார் என்ற கேள்வி இயல்பாகவே பொதுமக்கள் உள்ளத்தில் எழு கின்றது.

மண்ணுலகத்தினில் பொல்லா மாயையால் வந்து சேருகின்ற நெஞ்சப் புண்ணுக்கு மருந்தாக விளங்குகின்ற புண்ணியமூர்த்தி; காவிஉடை உடுத்தாலும் கட்டுச்சடை தரித்தாலும் காலத்தோடு ஒட்டி வளரவேண்டுமென்ற கருத்தினை உடையவர்கள்: பழமை யிலே ஊறித் திளைத்தவர்கள் என்றாலும் பழமைக்கும் புதுமைக்கும் நடுவிலே இருந்து பொருள் உலகை அருள் உலகாக நினைக்கின்ற அற்புதமான பாலமாகத் திகழ்கின்றவர்கள் கயிலைக் குருமணிகள். இன்று காலையில் நடைபெற்ற கனகாபிஷேகக் காட்சி ஆன்மீகத் துறையிலே ஒப்பார் வேறு எவரும் இல்லாத பெரியார் ஒருவர் (ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம்) கனகாபிஷேகம் செய்து கொள்கின்ற தகுதியினை உடையவர் என்று பொதுமக்களின் தீர்ப்பைச் சொல்லாமல் சொல்லுகின்றது. அதை உறுதிப் படுத்துவதேபோல் பொதுமக்களின் பிரதிநிதியாகிய அமைச்சர் பெருந்தகை அவர்கள் இந்த விழாவிற்குத் தலைமை தாங்குவதும் நமக்கு நன்றாகத் தெளிவுறுத்துகிறது.

பொருள் ஒன்றையே பொருளாகக் கருதாமல் அருளாகிய பொருளையே பொருளாகக் கருதுகின்ற பெரியார் ஒருவருக்கே இத்தனைச் சிறப்பும் பொருந்தும்; மேலும் பெருகச் செய்தலும் பொருந்தும். "விட்டேன் என்றுரை விடேன்" என்ற பழங் காலப் பாடலின் அடி ஒன்று நினைவிற்கு வருகின்றது. எல்லா வற்றையும் துறந்துவிட்டு யான் எனதென்னும் செருக்கறுத்து என்றும் பணியுமாம் பெருமை என்பதற்கு இலக்கியமாகத்

திகழ்ந்து தவவாழ்வு நடத்துகின்ற பெரியார் ஒருவருக்கு இது போன்ற விழா பொருத்தமாக அமைகிறது என்ற உண்மையை எடுத்துக்காட்டுவதுபோலத் துறவு வேந்தராகிய ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு இன்று கனகாபிஷேகம் நடந்த காட்சியைக் கண்குளிர, மனம்குளிர கண்டுகளித்த நாம் எல்லோரும் மகிழ்ச்சிக் கடலிலே மூழ்கியிருக்கின்றோம்.

கனகாலயம் என்று பேசப்படுகின்ற கயிலைமலையைத் தரிசித்து வந்த காரணத்தினால்தானோ என்னவோ பொன்மலையாகிய கயிலை மலையை அடைந்த அத்தனைபேரும் அதே நிலையை அடைகிறார்கள் என்பதை விளக்குவதுபோல இன்று அவர்களுக்குக் கனகாபிஷேகம் நடைபெற்றது. ஈதலையும் இசைபட வாழ்தலையும்விட ஊதியம் வேறு என்ன இருக்கிறது உயிருக்கு என்பதை எண்ணி நாட்டிற்கு நல்ல பல பணிகளைச் செய்துவருகின்ற குருமகா சந்நிதானம் அவர்களுக்குக் கனகாபிஷேகம் செய்வது மிகமிகப் பொருத்தமாக அமைந்திருக்கிறது.

தருமபுரம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சைவத்திற்கும், தமிழுக்கும், முதல்வனுக்கும், மொழிக்கும் செய்துவரும் தொண்டு என்றுமே மறக்கமுடியாத ஒன்று. இதயத்திலே நன்றியுணர்வு என்ற ஒன்று இருக்கும்வரை என்றுமே மறக்கமுடியாத ஒன்று. அந்த நன்றி உணர்வு நம் நெஞ்சிலே நிரம்பிவழிகின்ற காரணத்தினால்தான் அந்த நன்றியினை மகிழ்ச்சியினை வேறு விதத்தில் காட்டிக்கொள்ளமுடியாத நாம் இன்று அவர்களுக்கு இந்த ஒரு விழாவினை எடுத்து நம்முடைய மகிழ்ச்சியையும், நன்றியையும் காட்டிக்கொள்ளுகின்றோம். தருமபுரம் என்ற பெயர் காரணப்பெயராக விளங்கவேண்டுமென்றால் அவர்கள் செய்து வருகின்ற தருமத்தினால்தான் தருமபுரம் என்று விளங்கக்கூடுமென்று நாம் கூறக்கூடும் என்று நான் கருதுகிறேன். அத்தகைய சிறந்தமுறையிலே பைந்தமிழில் பற்றுணர்வுவளர்க்கப் பாடுபட்டு வருகின்ற அவர்கள் தம் அருள்வாக்கின்கீழ் நாம் அனைவரும் அமைதியும், இன்பமும், ஆனந்தமும் பெறுகின்றவழியில் நிலைத்த புகழோடு நீடுவாழ்ந்து இன்னும் நல்ல பல காரியங்களை நாட்டிற்குத் தந்தருளவேண்டுமென்றும், சைவம் தழைத்தோங்க அந்தச் சங்கரன் தாள்போற்றிப் பிழைக்க நம் அனைவருக்கும் அவர்கள் பக்கபலமாக நின்று அருளவேண்டுமென்றும் நினைக்குந்தோறும், காணுந்தோறும், பேசுந்தோறும் எப்போதும் அனைத்தும் உள்நெக ஆனந்தத்தேன் சொரியும் குனிப்புடையாரைப் பெரியார்கள்சார்பிலும் என்சார்பிலும் வேண்டிக்கொண்டு அவர்களுடைய அன்பையும், ஆசியையும் வேண்டிவிடைபெறுகிறேன்- வணக்கம்.

திரு. கிரிதாரி பிரசாத் B. A., B. L. அவர்கள்

"மலத்திலே கிடந்தேன் தன்னை எடுத்தருளி
மன்னிய வடிவமளித்து அறிஞர்
குலத்திலே பயிலும் திறமும் எனக்குக்கொடுத்து
உள்ளேவிளங்கும் சற்குருவே!"

"திருச்சிற்றம்பலத்திலே, பொன்னம்பலத்திலே
அன்பர்தம் அறிவாம் தலத்திலே
ஓங்கும் என் தலைவனே
கேட்க என் மொழியை"

"வான் குறை மழை பெய்யாது மாநிலம் வளமைகுன்றும்
கோல்முறைகோணும் குடிவளமகுறைந்து வாழும்
சாணவயிறு அதறகுக்கூடச் சரிவரக்கிடைக்கா ஊணும்
தானெனும் அகந்தைநீங்கித் தவசிகள் இல்லா நாட்டில்"

பெருமக்களே! இன்றையதினம் நடைபெறுகின்ற இந்தப் பெரிய விழாவிலே ஏதோ ஒரு குறிப்புக்காக அடியேனையும் பேச வேண்டுமென்று அழைத்திருக்கிறார்கள் குருமகாசந்நிதானம் அவர்கள். இங்கே பேசிய பெருமக்கள் அத்தனைபேரும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆனால் அடியேன் வடநாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்குப் பெயர்ந்துவந்தவன். அதை உள்ளத்திலே நினைத்து வடநாட்டையும் தென்னாட்டையும் இணைக்கவேண்டு மென்ற திருவுள்ளப்பாங்கினால் அடியேனையும் பேச ஆணையிட் டிருக்கவேண்டுமென்று கருதுகிறேன்.

இன்றைய விழாவிலே எனக்கு ஞாபகத்திற்கு வந்தது நம்மாழ்வார் பாடியபாட்டு. "கண்டோம் கண்டோம் கண்ணுக் கினிய கண்டோம்" என்ற பாட்டு. காண இயலாத ஒரு பெரிய காட்சியைக் கண்டோம். வாழ்க்கையிலே என்றும் கிடைக்கப் பெறாத ஒரு சிறந்த பேற்றினை இன்றையதினம் நாம் பெற்றோ மென்று சொல்லி இறும்பூது எய்துகிறோம். அதேசமயத்தில் வேறு ஒன்றையும் ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறது அது என்ன வென்றால் இந்த விழாவிற்குப் பெருஞ்சிறப்பைத் தேடித்தந்த எங்கள் பெருந்தகை திரு. பி. எல். கண்ணப்பச் செட்டியார் அவர்கள் கோவையிலிருந்து இங்கேவந்து அரும் பணியாற்றிய வர்கள். அவர்கள்தாம் இந்த விழாவை நடத்தவேண்டுமென்று கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களைக் கேட்டு அனுமதிபெற்று இந்த விழாவிற்கு அடிகோலியவர்கள், நம்முடைய கோவை

மாவட்டத்திலிருந்து ஒரு பெருந்தகை இந்த விழாவிற்கு அடி கோலியவர் என்பதையறிந்து நாங்கள் எல்லாம் இறும்பூது எய்துகிறோம். இத்தகைய ஒரு பெருவிழாவிலே ஆயிரம் ஆயிரம்பேர் கண்டுகளிக்கத்தக்க இத்தகைய வாய்ப்பை நல்கிய குருமகாசந்நிதானம் அவர்களுக்குத் திருவாளர். இராஜு செட்டியார் அவர்கள் சார்பாகவும், கோவை மாவட்டத்தின் சார்பாகவும் நன்றிகலந்த வணக்கத்தைச் செலுத்தி அமர்கின்றேன். வணக்கம்.

திரு. T. M. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் M. A., I. A. S.

குருமகாசந்நிதானம் அவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! எல்லோருக்கும் வணக்கம். திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலி என்று ஞானசம்பந்தப்பெருமான் பாடினார். அந்தத் திருநெல்வேலியின் பிரதிநிதியாக எங்கள் தலைவர் சிதம்பரம் பிள்ளை பேசிய பிறகு எனக்கு வாய்ப்பு இருக்காது என்று எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் குருமகாசந்நிதானம் அவர்கள் நீயும் வந்து சில வார்த்தைகள் சொல்லவேண்டும் என்று என்னைக் கட்டளையிட்டு இங்கே நிறுத்தியிருக்கிறார்கள். சிந்திக்கக்கூட அவகாசம் கொடுக்கவில்லை.

கவிச்சக்கரவர்த்தி கம்பர் இராமாவதாரத்தைப்பற்றிப் பாடுகின்றபோது அவதார இரகசியத்தைச் சொன்னார். உலகத்தில் மக்கள் எல்லாம் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தேவர் ஆகும் காலத்தில் வானத்திலே உறைகின்ற தேவன் இருக்கின்றானே அவன், எல்லாவற்றிற்கும் மூலமூர்த்தியாக இருக்கும் இறைவன் மனிதனாகப் பிறந்து, மனிதனாக வாழ்ந்து மக்களினத்திலே ஒரு உயரிய பதவியைப் பெறவேண்டும் என்று ஆசைப்பட்டான். மக்கள் தேவர்களாக விரும்பும் இந்தக்காலத்திலே தேவனாக இருக்கின்றவன் மனிதனாக அவதாரம் எடுத்து, மனிதனாக வாழ்கின்ற ஒரு அற்புதமான எண்ணத்தைப் பார்க்கும்போது "அது எவ்வளவு உயர்ந்தது, மானிடம் வென்றது" என்று சொன்னார்.

அதுபோல, ஆலயங்களுக்குச் சென்று அங்கே தட்சிணாமூர்த்தியைப் பார்த்திருக்கிறோம். அதுபற்றிய பாடல்களையெல்லாம் நாம் கேட்டிருக்கிறோம். "அன்று ஆலின்கீழ் இருந்து அவன் சொன்னான்" என்று அவனைப்பாராட்டியிருக்கிறோம். நம்மிடையே

குருமூர்த்தமாக எழுந்தருளிய, மானிடராக எழுந்தருளிய கயிலாயம்வரை சென்று கயிலாயநாதரைத் தரிசித்து நம்மிடத்திலே அருள் உபதேசம் செய்கின்ற குருமகாசந்நிதானம் அவர்களைப் பார்க்கும்போதெல்லாம் இந்தப் பாட்டு ஞாபகம் வருவதுண்டு.

மானிடம் வென்றது என்று கம்பன் பாடினானே எவ்வளவு அற்புதமான எண்ணம். இறைவனாக இருக்கின்ற தட்சிணாமூர்த்தத்தைக் குருமூர்த்தமாகப் பார்க்கும்போது நம் உள்ளத்திலே எழுகின்ற நெகிழ்ச்சிகளின் காரணமாகக் கயிலை சென்று வந்த மகாசந்நிதானம் அவர்களுக்குக் கனகாபிஷேகம் செய்து காணுகின்ற ஒரு பேறு நமக்கெல்லாம் வாய்த்திருக்கின்றது என்று நினைக்கின்றபோது அது நம்மை நாமே பாராட்டிக்கொள்ளும் விஷயமாகும். இன்று காலையிலே பக்கத்திலே இருந்த ஒரு நண்பர் "மகாசந்நிதானத்திற்குக் கனகாபிஷேகம் பண்ணுகிறார்களே அதனால் மகாசந்நிதானத்திற்கு என்ன இலாபம்?' என்று என்னைக்கேட்டார். "மகாசந்நிதானத்திற்கு இலாபம் ஒன்றுமில்லை இலாபம் அடைபவர்கள் நாமே. இத்தகைய ஒரு பெருநிலை காரணமாக நாமெல்லாம் செய்யவேண்டிய ஒரு கடமையைச் செய்கிறோம் என்ற ஆன்மதிருப்தியிருக்கிறது. அதோடு மாத்திரமல்ல. அந்தப் பெரியார் கயிலை சென்று வந்து கயிலைநாதராக வாழ்த்துகின்ற வாழ்த்தை நாம் பெறுகின்றபோது மானிட வாழ்க்கை வென்றதென்று கவிச்சக்கரவர்த்தி கம்பன் பாடியது எவ்வளவு அற்புதமான எண்ணமென்பது விளங்குகிறது.

குருமூர்த்தமாக எழுந்தருளியிருக்கும் மூர்த்தியைக் குருவாக அனுபவிக்கும் அனுபவத்தைப் பார்க்கும்போது பெருமை தருவதாக இருக்கிறது. ஆகவே நாம் இலாபம் அடைகிறோமே ஒழிய மகாசந்நிதானத்திற்கு இலாபம் ஒன்றுமில்லை" என்று சொன்னேன்.

ஆயிரக்கணக்கான மக்களாகக் கூடி மகாசந்நிதானத்தின் கனகாபிஷேகக் காட்சியைக் கண்குளிரக் கண்டோம். அந்த அனுபவம் நமக்குத்தானே ஒழியக் கனகாபிஷேகம் செய்துகொண்ட சுவாமிகளுக்கு அல்ல என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட ஒரு நல்ல விழாவிலே பெரியோர்கள் கூடியிருக்கும் இந்த அவையிலே என்னையும் அழைத்துப் பேசுவதற்கு மகாசந்நிதானம் ஆணையிட்டதற்கு அவர்களுக்கு வணக்கம் செலுத்தி விடைபெற்றுக்கொள்கிறேன்.

புலவர், திருமதி, சி. குழந்தையம்மாள் அவர்கள் M. L. A.

கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களுடைய திருவடிகளை என்னுடைய சிரமேற்கொண்டு இங்குக் கூடியிருக்கும் சிவநேசச் செல்வர்களுக்கும், செல்வியர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். நம்முடைய மணிவாசகப் பெருமான் இறைவனுடைய அருள்பெற்ற அன்று

> "இன்று எனக்கருளி இருள்கடிந்து உள்ளத்து
> எழுகின்ற ஞாயிறே போன்று
> நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்"

என்று சொன்னர். நம்மைப்போன்ற சாதாரண மக்களுக்கு இறைவன் நேராகத் தன்னுடைய திருவருள் பேற்றினை நல்குவதைவிடக் குருமூர்த்தியின் வடிவமாக அருள்செய்வது இயல்பு. அது பரம்பரையும் ஆகும். அந்த முறையிலே இன்று கயிலாய யாத்திரை சென்று வெற்றிபெற்று வந்திருக்கிறூர்கள் நம்முடைய குருமகாசந்நிதானம் அவர்கள். நமக்கெல்லாம் உலகத்திலேயும் உடலை வளர்க்கக்கூடிய தாயும் தந்தையும் ஒரு ஊரைவிட்டு இன்னெரு ஊருக்குச் செல்வார்களேயானல் சென்றுவிட்டுத் திரும்பும்போது மக்களுடைய மகிழ்ச்சியைப் பெறுவதற்கு ஒரு சில பொருள்களை வாங்கிவருவார்கள். அது குழந்தைகளுக்குத் தின்னக்கூடிய பொருளாக இருக்கலாம். விளையாடக்கூடிய பொருளாக இருக்கலாம். (அதுபோல) ஆனல் ஆன்மாவுக்குத் தந்தையாக இருக்கும் ஞானசிரியர்கள் கயிலாயயாத்திரைபோன்ற சிறந்த ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்துவரும்போது தம்மை எதிர்நோக்கும் ஆன்மாவுக்கு மகிழ்ச்சி ஊட்டக்கூடிய ஒரு சில பொருள்களை வாங்கிவருவார்கள். அந்த முறையிலே மகா சந்நிதானம் அவர்கள் நம்மைப்போன்ற அடியார் குழுவினருக்கு ஆன்மா நல்ல முறையில் பயிற்சிபெற்று இறைவன் திருவடியில் இரண்டறக் கலப்பதற்கு வேண்டிய சூழ்நிலையைப் பயிற்றுவிக்கக் கூடிய திருவருட் படத்தை அனுக்கிரகம் அல்லது கருணையினைக் கொண்டுவந்திருக்கிறூர்கள். அதனை இன்று நாம் நேரடியாகப் பெறும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறேம். ஆகவே ஆன்மாவுக்கு வளர்ச்சியைக் கொடுக்கக்கூடிய இதுமாதிரியான விழாக்கள் மனித வாழ்க்கையில் மிகவும் இன்றியமையாதன என்பதை நாம் அறிகின்றேம். அதனைத்தான் மணிவாசகப்பெருமான் அன்று

"இன்று எனக்கருளி............நினைந்தேன்" என்று சொன்னார்கள். நம்முடைய உள்ளத்திலே இருக்கும் இந்த அஞ்ஞானம் என்னும் இருளானது எப்போது நீங்குகிறது என்று சொன்னால் இப்படிச் சிறந்த அடியவர்களுடைய கூட்டத்திலே இரண்டறக் கலந்து இறைவனுடைய திருவடிப்பேற்றினை நினைக்கும்படியான ஒரு சந்தர்ப்பத்திலேதான் திருஞானசம்பந்த சுவாமிகளும்,

> " கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
> பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம் "

என்று சொன்னார்கள். இப்படி எல்லா இடங்களிலும் 'சிவாய நம', 'நமசிவாய' என்று ஒலிக்கும்படியான பெருந் திருக்கூட்டத்திலே கலந்து நாம் பெரும்பேறு பெறுவதற்கு - சிறந்த ஆன்ம லாபத்தைப் பெறுவதற்கு ஒரு வாய்ப்பு இந்தக் கனகாபிஷேக விழாவிலே கலந்துகொள்வது. உடலுக்குத் தாய் தந்தையாக இருக்கின்றவர்கள் விளையாட்டிற்காகவும், தின்பதற்காகவும் பொருளை வாங்கிவருவதுபோல இந்த உயிருக்கு ஆன்மநாயகனாக இருக்கக்கூடிய குருமூர்த்திகள் கயிலாயத்திற்குச் சென்று வாங்கிவந்த பொருள்களை இப்போது நாம் வாங்கிக்கொண்டு அவரவர்கள் இடத்திற்குச் செல்லப்போகின்றோம். ஆகவேதான் அந்த ஆன்மநாயகனுக்கும் இறைவனது திருவடிப்பேற்றினால் ஏற்படும் 'தொடர்பு'' நேராகப் பார்ப்பதனாலேயும், அனுமானிக்கப்படுவதாலேயும் ஏற்படுகின்றது.

அவ்வாறு அனுமானிப்பது நம்மைப்போன்ற சாதாரண மக்களுக்கு ஏற்படாது. அதற்கு நிறைந்த அறிவு பெற்றிருக்க வேண்டும். ஆன்மீக அறிவும், சக்தியும் பெற்றிருக்கவேண்டும். ஆனால் இப்போது சாதாரண வாழ்விலே ஈடுபட்டிருக்கும் நம்மைப் போன்றவர்களுக்குப் பார்ப்பதனாலே, கண்ணாலே காணும்படியான காட்சியினாலே அந்தத் தொடர்பு ஏற்படக்கூடியது. ஆகையினாலே இந்த ஆன்ம வளர்ச்சியைப் பெறக்கூடிய மெய்ஞ்ஞானம் அல்லது சிவஞானம் அல்லது பதிஞானம் என்னும் சிறந்த ஞானத்தை நாம் இடையறாது பெறும்படியான ஒரு சக்தியை ஊட்டும் குருமூர்த்தியாக விளங்குகின்ற மகாசந்நிதானம் அவர்களுக்கு நாம் செய்யும் கனகாபிஷேக விழாவானது ஒரு சக்தியைக் கொடுக்கும் ஒரு பெருங்காட்சியாக இன்று நமக்குக் கிடைத்திருக்கின்றது. அதனை நாம் வாழ்க்கையிலே பயன்படுத்தவேண்டும். "வாழ்த்துவதும் வானவர்கள்தாம் வாழ்வான்" என்பதற்கேற்ப நாமெல்லாம் வாழவேண்டும்

என்பதற்காக அவர்களை வாழ்த்துகிறேம். நாம் இந்த விழாவிற்கு வரமுடியாமல் போயிருக்குமானல் என்ன நினைத்திருப்போம். "கொள்ளுங்கொல் எனை அன்பரில் கூய்ப்பணி......" என்று மாணிக்கவாசகப் பெருமான் நினைத்ததுபோல நாம் இடையருது பற்றிக்கொண்டிருக்கும் எங்களை இந்த அன்பர்களுடைய கூட்டத்திலே சேர்க்கவில்லை என்று கருதிவிடுவோமாகையினல் இங்கு வந்து சில வார்த்தைகள் கூறும் ஒரு சந்தர்ப்பத்தை ஆக்கிக் கொடுத்திருக்கிருர்கள். ஆகவே இப்படிப்பட்ட ஒரு பெரும் பேருனது நமக்கு வாழ்க்கையிலே ஏற்படவேண்டுமென்று சொன்னல் அடியார்களுடைய திருக்கூட்டமானது நமக்கு மிக்க துணைபுரியும் என்பதோடுகூட மகாசந்நிதானம் அவர்கள் இந்த ஆன்ம வளர்ச்சிக்காகப் பெற்றுவந்திருக்கும் பெருங் கருணைப் பழம்.

"..................பழமோ
....
உபநிடதப் பழம்நீ
சைவமுதல் மதுரப் பழம்நீ."

என்றெல்லாம் சொன்னர்களே அந்தப் பழத்தை எங்களுக்குக் கொடுக்கவேண்டும். அதனைப் புசித்து நாங்கள் எங்கள் வாழ்க்கையிலே வெற்றியடையவேண்டும். இது நமக்கு ஒரு பெரும் சக்தியை உண்டாக்குமென்பதில் எந்தவிதமான ஐயமும் கிடையாது. ஏனென்றுகேட்டால் அவர்கள் மிகவும்சக்திபடைத்தவர்கள் என்பது எனக்கு நன்ருகத் தெரியும். அது என்னுடைய சிறிய அனுபவத்திலேயே ஏற்பட்டிருக்கிறது.

பத்தாண்டுகளுக்கு முன்பு இந்த மடத்திற்கு வரும் பேறு எனக்குக் கிடைத்தது. அன்று அவர்கள் என்னைப் பார்த்தபோது நான் இருந்த ஓர் நிலைமைக்கும், அவர்களுடைய அருட்கடைக் கண் நோக்கு பெற்றபிறகு ஏற்பட்ட நிலைமைக்கும் பல வேறுபாட்டை நான் வாழ்க்கையில் காண்கின்றேன். ஆகையினல் அவர்களுடைய அருட்கடைக்கண் நோக்கைப் பெறுகின்றவர்கள் ஜாக்கிரதையாக நின்று பெறவேண்டும். அணுக்கத் தொண்டராக இருந்து அந்தத் திருவருட்பேற்றைப் பற்றிக்கொள்வதிலே எத்தனையோவிதம் இருக்கிறது. சிலபேர் இப்போது இறைவனுடைய திருவடியைப் பிடிப்பதற்குக்கூடத் தெரியாதவர்களாக இருப்பார்கள். இறைவனுடைய திருமுகத்தைப் பார்த்து வணங்குபவர்களும், கையைப்பிடித்து வணங்குபவர்களும், கட்டியணைத்து வணங்குபவர்களும் இருப்பார்கள். ஆனல் எல்லாப்

பொருளையும் தாங்கிநிற்கும் திருவடிகள்தான் சக்திபடைத்தன. அந்தத் திருவடியைப் போற்றினல் எல்லா நலங்களும் அவனிடம் சேர்ந்திருக்கும். அந்தப் பாதத்தை வணங்கக்கூடிய பேற்றை பரம்பரை நமக்குக் கொடுத்திருக்கிறது. ஆகவே பரம்பரை என்று சொல்லும்போது,

"வாழையடி வாழையென வந்த
திருக்கூட்ட மரபில் யானொருவ னன்றோ"

என்று சொல்லும் வடலூர் இராமலிங்கப்பெருமானுடைய கவியை உள்ளத்திலே கொண்டு கோயம்புத்தூர் சிரவணபுரம் கௌமார மடாலயத்தின் சார்பாகவும், அந்த மடத்து அதிபர்கள், அங்கத்தினர்கள், அடியார்கள் அத்தனைபேர் சார்பாகவும், குருமகா சந்நிதானம் அவர்களுடைய திருவருட்பேறு கிடைக்கும் என்ற நம்பிக்கையிலே இருக்கின்றோம். அவர்களுடைய திருவடிகளுக்கு வணக்கமும், வாழ்த்துக்களும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆர்துணை சொல்!

வேலூர், க. சோக்கலிங்கம்.

இராகம் - சண்முகப்பிரியா] [தாளம் - ஆதி

பல்லவி

ஆளும் தேய்வம் நீயன்றி வேறெனக்கு
ஆர்துணை சோல் லம்மையே (ஆளும்)

அனுபல்லவி

நாளும் உனதடி நம்பிவந்தேன் தையல்
நாயகியே இன்ப நலந்தருந் தாயே (ஆளும்)

சரணம்

வேளும் கற்பக விநாயக னும்மடி
மேல் விளையாட மகிழன் னையே
மாளும் வாழ்வினில் மயங்கிய என்னையே
மனமிரங்கி உனது மலரடியே தந்து (ஆளும்)

சிவ ஞான போதம்

கட்டுரை 29

முதுபெரும் புலவர்

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

(மலர் 20, இதழ் 6, பக்கம் 325 இன் தொடர்பு)

மூன்ருவது சூத்திரம் ஐந்தாவது அதிகாரணம்

முன் அதிகாரணத்தில், சூக்குமதேகமே ஆன்மா என்னும் கோள்கையரை மறுத்து, அத்தேகம் வேறு ஆன்மா வேறு என்று சாதித்த உண்மை தேரியலாயிற்று. அக்கோள்கையின் வேறுபட்ட கோள்கை இவ்வதிகரணத்தில் மறுக்கப்படுகின்றது. அது பிராணனே ஆன்மா என்னும் கோள்கையாகும்.

பிராணுன்மவாதிகூற்று:- 'சூக்குமதேகத்தின்தோழிற்பாடு கனுக்காணும் இடத்தில் அன்றி வேற்றிடத்தில் சேல்லாது. அதனுல் சூக்குமதேகம் ஆன்மா அன்று என்றது ஒக்கும். பிராணவாயுவின் தோழிற்பாடு ஆண்டும் காணப்படுகின்றது. ஆதலின், அப்பிராண வாயுவே அடங்குதல் விடுதல் சேய்து அறிவதாகிய ஆன்மா'.

மூலம்

அதன் மறுப்பு:- 'கண்படில் உண்டிவினையின்மையின் ஆன்மா உளது' என்றது.

பொழிப்புரை

ஒடுங்கின இடத்து இன்பத்துன்பம் ஜீவனம் ப்ரகிருதிக்கு இல்லை. இன்மையின், ஒடுங்காத இடத்து இன்பத்துன்பம் ஜீவியா நிற்பதுளது. ஆதலின், அதுவே அவ்வான்மாவாம் என்றது.

'உண்டிவினை' என்ற தொடர்க்கு உண்டியும் வினையும் என்பது பொருள். 'வண்டிமாடு' என்பதற்கு வண்டியும் மாடும் எனப் பொருள் கொள்ளுங்கால் உம்மைத் தொகையாகும். இதுவும் உம்மைத் தொகைப்பொருளதே. வண்டியாகிய மாடு என உரைத்தல் சாலாது. உண்டியாகிய வினை என்றுரைத்தல் சாலும், வண்டியன மாடு என்பதுபோல உண்டியது வினை எனலாம்; ஆயினும் அது பொருந்தாது. வடமொழிச் சூத்திரத்தில் உண்டியின்மை மாத்திரம் கூறப்பட்டுளது. மொழிபெயர்த்தவர் அங்கு விழிபெயர்த்தார் போலும். ஆசிரியர் சிவஞானமாமுனிவர் 'இனம்பற்றி வினையின்மையும் உடன் கோடல் கருத்து' என்றருளினர்.

கண்படைகொண்டபோது உண்டிவினைஎன்றதுஉடற்கோ பிராண வாயுவிற்கோ? உடல் ஆன்மா அல்லாமையால் அதற்கு எப்பொழுதும் அவை இல்லையே ஆம். பிராண வாயுவிற்கோ எனின், தூங்கி எழுந்த பின்னர்ச் சுகமாய்த் தூங்கினேன் என்று அறிதல் உண்டு. அதனால், ஆண்டு இன்பத்துன்ப நுகர்ச்சி (சுகதுக்கானுபவம்) உண்மையைப் பெற்றும். விழித்த காலத்திற்போல உறங்குங்காலத்திலும் பிராணவாயு இயங்குகின்றது. அதனால், வினை உண்மையையும் பெற்றும். அதற்கு அவை உடம்பின்கண் இல்லை என்றல் மாறுகோள் ஆகும். ஆகலின். இந்த ஹேது போலியாய் முடியும் என்னும் தடையை அதன் தாற்பரியப் பொருளை உரைக்கும் முகத்தாலே நீக்குவதன் பொருட்டு எழுந்தது இப்பொழிப்புரை.

இப்பொழிப்புரையில் உண்டி என்று விஷயங்களின் இடமாக வரும் சுகானுபவத்தையும் துக்கானுபவத்தையும் குறித்தார். வினை என்றது உடம்பு சேட்டித்தலைக் குறித்தார். அதற்காக 'இன்பத்துன்பம் ஜீவனம்' என்றார். செவ்வெண்தொகை விகாரத்தால் தொக்கது 'செவ்வெண்' 'செந்தொகை' என்றாற்போல்வது.

ஜீவியாநிற்பது என்றது. 'உறங்குவதுபோலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு என்ற இடத்திற்

போலச் சீவியா நிற்றல் என்னும் தொழிற் பெயர் அளவாய் நின்றது. நிற்றலைச் செய்யும் ஒன்றைக் குறிப்பதோ வேறோ அன்று, உண்டி - இன்பத்துன்பம். வினை - ஜீவனம். வாக்கியம் இன்பத்துன்பமும் ஜீவனமும் உள என்று இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லை. உளது என்று ஒருமை வினை கொண்டிருக்கின்றது வாக்கியப் பிழையாகும். ஆதலின் இன்பத்துன்பம் உளது. ஜீவனம் உளது ஆகலின் அதுவே அவ்வான்மாவாம் என்று தனித்தனி காட்டின், வாக்கியம் குற்றப்படாததாகும்.

உடம்பு தூங்கும்போதும் விழிக்கும்போதும் திரிபு இல்லா மல் ஒரு தன்மைத்தாகும், ஆதல்பற்றி அவ்வுடம்பைப் பிரகிருதி என்றார். பிரகிருதிக்கு என்று நான்கனுருபு விரித்தார். 'உருபுமயக்கம்' இதை விளக்கின், இதைக் கற்போர் பலர் உருபும் மயக்கம் எய்தும். இலக்கணஞானம் வேண்டாதது என்னும் மேதைகள் பெருகி, வேண்டும் என்னும் பேதைகள் சிறுகும் காலம் அன்றோ இது ?

'உடம்பின்கண்' என்று பொருளுரைத்தார் உரை ஆசிரியர். அஃது ஏழனுருபு. உரையில் ஏழனுருபு விரித்துப் பொருள்கொண்டதால் மூலத்தில் 'பிரகிருதிக்கு' என்று நான்கனுருபில் அமைந்ததற்குக் காரணம் சொல்லியாதல் வேண்டும். வேற்றுமை மயக்கம், பொருள் மயக்கம் உருபு மயக்கம் என்று இருவகைத்து. பிரகிருதிக்கண் என்று ஏழ னுருபு இருத்தற்குரிய இடத்தில் பிரகிருதிக்கு என்று நான்க னுருபு இருத்தல் வேற்றுமைப்பொருள் மயக்கம் ஆகாது. உருபுமயக்கமே ஆகும். 'மணற்கண் ஈன்ற' என்று சொல்லற்குரிய இடத்தில் 'மணற்குஈன்ற' என்றதுபோல் வது இது. பிரகிருதிக்கு உடலின்கண் என வெண்பா வுரையில் உள்ளது (சிற்றுரைபார்க்க)

பிரகிருதி என்றது பிராணவாயுவைக் குறிப்பதாகக் கொண்டு இரண்டுகாலத்தும் ஒப்ப இயங்குதல் பற்றிப் பிராணவாயுவுக்கு அவ்வுண்டியும் வினையும் இல்லை என் றுரைப்பார் ஒரு சிலர்.

பிரகிருதி விகாரமாகிய சித்தத்திற்கு அவை இல்லை. சுழுத்தியின்கண்ணும் சித்தமே தொழிற்படும். அதனால் சித்தமே ஆன்மா என்னும் சித்தான்ம வாதிகளை மறுத்தற்கு எழுந்தது இவ்வதிகரணம் என்று உரைப்பார் ஒருசிலர்.

சிற்றுரையில் உள்ளபொருள்

"ஈண்டு உண்டி என்றது விடயங்களின் இடமாகவரும் இன்பத்துன்பநுகர்ச்சியை. வினை என்றது உடம்பு சேட்டித்தலை. ஆகலின் இவ்விரண்டும் பிராணவாயுவை ஒழித்து ஒழிந்த கருவிகள் எல்லாம் ஒடுங்கியதுயிலிடத்து அஃது இயங்காநிற்பவும் உடம்பின்கண்ணே நிகழ்தல் இன்மையின், அவை ஒடுங்காத நனவினிடத்து அவை இரண்டும் அதன்கண் நிகழ்தல் உண்மையின் அவ்வின்மையுண்மைகட்கு ஏதுவாகக் கருவிகளை ஒடுக்கியும் ஒடுக்காதும் நிற்பது யாது? அதுவே அவ்வான்மா என்றவாறும்; கண்படில் உண்டிவினையின்மையின் ஆன்மா உளது என மேற்கோண்டது (சிவ ஞான மாமுனிவர் எழுதியருளிய உரை).

இதுகாறும் அறிந்தவற்றையே இவ்வெண்பாவிற்சுருக்கமாகக் காணலாம்.

"கண்டறியும் இவ்வுடலே காட்டோடுங்கக் காணுதே
உண்டிவினை இன்றி உயிர்த்தலால்—கண்டறியும்
உள்ளம்வே றுண்டாய் ஒடுங்கா! துடல்நண்ணில்
உள்ளதாம் உண்டிவினை ஊன்"

கண்டறிதற்கு நிலைக்களம் இவ்வுடம்பு. கருவிகள் தொழிற்படாமல் இதன்கண் ஒடுங்கும். கருவிகள் ஒடுங்குங்கால் உண்டியும் வினையும் இவ்வுடல் இல்லதாம். ஆயினும் பிராணவாயுவின் இயக்கம் உளது. அதன் இயக்கம் இருந்தும் உடல் உண்டி வினை இல்லாமைக்கு யாது காரணம்? பிராணவாயுவே ஆன்மா ஆனால் சுழுத்தீ துரியங்களில் உடற்கு ஏன் உண்டிவினை இல்லை? கருவிகள் ஒடுங்காமல் தொழிற்பட்டால் ஆன்மா அவற்றைக்கொண்டு கண்டறியும். ஒடுங்கினால் அறியமாட்டா. ஒடுங்கியபோதும் ஒடுங்காதபோதும்

பிராணவாயு இருக்கின்றது. ஒடுங்காதபோது ஆன்மாவினது அறிதற்ருெழிற்பாட்டைப் பிராணவாயுவுக்கு ஏற்றிடலாம். ஒடுங்கியபோது ஏற்றல் ஒண்ணுமோ? அறிவது ஆன்மாவே, பிராணவாயு அன்று. அறிதற்ருெழிலுக்குக் கர்த்தா பிராண வாயுவே ஆயின், கருவிகள் ஒடுங்கியகாலத்தும் அறிதல் வேண்டும். உயிர் ஒடுங்காதபோது உடல் உண்டியும் வினை யும் உளது. உயிர் ஒடுங்கியபோது உடல் உண்டியும் வினை யும் இலது. உயிர் ஒடுங்கிய சுழுத்தியிலும் துரியத்திலும் பிராணவாயு தொழிற்படுகின்றது. படினும் உடல் உண்டியும் வினையும் உளதன்று. ஆன்மாவின் சம்பந்தம் இன்றிப் பிராணவாயுவின் சம்பந்தம் உடையதாயினும் உடல் உண்டி வினையிலதாதலாலும், ஆன்மாவின் சம்பந்தம் உள்ளபோதே உடல் உண்டிவினை உளதாதலாலும் பிராணவாயுவே ஆன்மா அன்று. அதனின் வேருக ஆன்மா உண்டு.

வெண்பாப் பொருள்

சிற்றுரை

'கண்டறிதற்கு நிலைக்களமான இவ்வுடம்பின்கண்ணே, காட்டாய கருவிகள் தொழிற்படாதே ஒடுங்கவும் அவை ஒடுங்கியவழி உண்டியும் வினையும் பிரகிருதிக்கு இல்லையாக வும், பிராணவாயு நிலைபெற்று இயங்குதலான், கண்டறியும் உரிமையையுடைய உயிர் பிராணவாயுவின் வேருயுண்டு. அவ்வுயிர் ஒடுங்காது அவ்வுடலின்கண் எய்திற்ருயின், அவ்வுடம்பு கருவிகளின் தொழிற்பாட்டான் ஆய உண்டியும் வினையும் உடைத்தாம். அதனை ஆராய்ந்தறிவாயாக.'

பேருரை

'ஆன்மாவின் சன்னிதியிற் கண்டறிவதாகிய இவ்வுடல் உண்டியும் வினையும் இன்றிக் காணுதவாறு காட்டாய கருவி கள் ஒடுங்கவும் ஒடுங்காது பிராணவாயு இயங்குதலாற் கண்டறியும் உரிமையுடைய ஆன்மாப் பிராணவாயு அன்று;

அதனின் வேறுண்டு ; அவ்வான்மா ஒடுங்காது கருவிக ளோடும் கூடிற்ருயின், உடல் உண்டியும் வினையும் உடைத் தாம் ; அதனை ஆய்ந்தறிவாயாக என்க.—'

'கண்டறிதல்' என்பதில் உள்ள காட்சியும் அறிவும் வெவ்வேறல்ல. அதனுல் 'மீமிசை' என்ருர். மீ எனினும் மிசை எனினும் பொருள் ஒன்றே. ஒரு பொருளவாய இரு சொற்ருெடர் 'மீமிசைப்பதம்' எனப்படுதல் இலக்கணமரபு. மீ என்றதும் மிசை என்றதன் மருஉவேயாயினும் இங்கனம் கூறுதல் வழக்கத்தில் உளது

காட்டு என்றது கருவிகளை. ஒடுங்கவும் என்னும் சிறப்பும்மை தொக்கது. சித்தியாரில் உள்ளதாய 'அறிந் திடும் முதலியாகின் அதுநிற்கக் கரணம் போகாது' என்னும் பொருளை விளைத்துநின்றது. 'உடலே' 'காணுதே' என்னும் இடத்து ஏகாரங்கள் அசை என்ருர் உரையில். சிற்றுரையில் 'உடலே' என்றதற்கு 'உடம்பின்கண்' என் றுரைத்ததால் அங்கு அஃது ஏழனுருபின்பொருட்டாயிற்று. இங்கு அசை எனப்பட்டது. 'இவ்விடத்தே சாக்கிரத்தை யெய்தியவுள்ளம்' எனத் தொடங்கும் வெண்பாப்பொருள் விளக்கத்தில் 'ஏகாரம் ஏழாவதன் பொருள் குறித்து நின்றது' என்றதும், 'கண்பேறே காணக்கழல்' என்றதில் 'ஏகாரம் ஏழனுருபின் பொருளுணர நின்றது' என்றதும் ஈண்டுணரற் பாலன, புலவருட் புதியோர்க்கு இது புதுவதேயாதலின் அறிந்து களிப்பர்.

'காணுதே காட்டோடுங்க எனமாறுக' மாருது கோடலே சிறந்தது, காணுதே உயிர்த்தல் எனலே பொருத்தம். அறியும் உடல், இடப்பெயர்கொண்ட பெய ரேச்சம். அறியும் உள்ளம் வினைமுதற் பெயரைக் கொண்ட பெயரேச்சம். உயிர்த்தல் - பிராண வாயுவின் சஞ்சாரம். உண்டு என்பது உண்மைத்தன்மையை உணர்த் தும் வினைக்குறிப்பு முற்று. 'ஆய் முன்னிலை யேவல்' உண்டாய் நண்ணில் உள்ளதாம் என்பதே அமைவது.

ஆய் எனத் தனியே பிரித்துக்கொண்டுரைத்தல் பேரறிவின் விளைவு. 'அறுவகைச் சமயத்தோர்க்கும்' 'மலத்தைப்பற்றி' முதலியவற்றின் பொருள் கோள்வழியைச் சார்ந்தது இது. உடம்பை ஊன் என்றது ஆகுபெயர். ஆன்மா வேறுண்டு என்றதனை வலியுறுத்துவார், ஒடுங்காது உடல் நண்ணில் உள்ளதாம் உண்டிவினையூன் என உடம்பாட்டு முகத்தானும் ஓதினர். 'இது அருத்தாபத்தியளவை' (சிற்றுரை). இவ்வதிகரணத்தாலே சுழுத்தி துரியங்களில் நிகழும் இயல்புபற்றி உயிருண்மை சாதிக்கப்பட்டது. இதுகாறும் 'சார்மாயை நீ அல்லை' என்றதை வலியுறுத்தியவாருகும்.

(தொடரும்)

மதிப்புரை :

திருவேரகம், ஸ்ரீ சுவாமிநாதன் பிள்ளைத்தமிழ்
(விரிவுரையுடன்)

ஆசிரியர் - கோவைக்கவியரசு, கு. நடேசகவுண்டர்; உரை ஆசிரியர் குகஸ்ரீ ரசபதி; கிடைக்குமிடம்: ஸ்ரீ சுவாமிநாதசுவாமி தேவஸ்தானம், சுவாமிமலை. தஞ்சைமாவட்டம். பக்கங்கள 256. விலை ரூ. 1-00.

கவியரசு. திரு. நடேசகவுண்டர் அவர்கள் சிறந்த செந்தமிழ்ப் புலவர்; அழகொழுகும் கவிகளில் எட்டிகுடி முருகன் பிள்ளைத் தமிழ் முதலிய பலநூல்களை உலகிற்கு உதவிய பொய்யில்புலவர் சுவாமிமலை சுவாமிநாதசுவாமியின் மேல் இப்பெருந்தகை பாடியுள்ள இப்பிள்ளைத்தமிழில் பலபாடல்கள் நம் உள்ளத்தை உருக்குகின்றன. சமயநூல்களில் அழுந்திய பக்திஉடைய இவ்வாசிரியரின் தெளிந்த உள்ளக்கனிவை இக்கவிகள் அனைத்திலும் காண்கின்றோம். கற்பனைச்சிறப்பு, நடையழகு, உருக்குந்திறன் ஆகிய அனைத்து நலமும் இந்நூலிற்கண்டு இன்புறுகின்றோம். தமிழ்த்தெய்வத்துக்குக் காப்புப் பருவத்தில் இடம்தந்து தம் தமிழ்ப்பற்றினை இவ்வாசிரியர் இனிது புலப்படுத்தியுள்ளமை அறிந்து இன்புறத்தக்கது. சிறுபறைப்பருவத்து 7 ஆம் பாடல் பயிலப் பயில சொல்லாட்சித்திறம் காட்டி மிளிர்கின்றது. எளிய இனிய உரை, நல்ல பதிப்பு, குறைந்த விலை கோடியர்ச்சனை கொண்ட குழகனுகிய சுவாமிநாதனைப் பரவும் இப்பாவலர்க்கு நம் பாராட்டு. தமிழ்மக்கள் அனைவரும் வாங்கிப் பயில்கவென ஆற்றுப்படுத்துகிறோம். —சொ. சிங்காரவேலன். B.A.

மன எழில் வேண்டும்!

செஞ்சோற்கோண்டல
வித்துவான். சொ. சிங்காரவேலன், B. A.

(மலர் 20, இதழ் 6, பக்கம் 326 இன் தொடர்ச்சி)

உண்மையிது ; அயல்வீட்டான் வாழ்வு என்றால்
உவர்க்கின்ற கொடியமனம் உள்ள மட்டும்
தண்மைநிறை எழில்வருமா ? பிறனைக் கண்டு
தடம்பறித்துக் குழிவெட்டும் தீய போக்கு
மண்ணிதிலே வாழ்கின்ற மட்டும் தூய
மனவழகு தூயஎழில் வருமா சொல்வீர் !
பெண்ணிமையிங்கு ஆண்மையோடும் பிணைந்து நாட்டில்
பேரெழிலை உள்ளத்தே வளர்த்தல் வேண்டும் ! (4)

கிழங்கினத்திற் கருணையுண்டு ; மனிதர் வாழ்வில்
கிளர்ச்சியுறுங் கருணையில்லை ; வாழ்வோர் என்போர்
பழங்கணக்குப் பார்ப்பதிலோர் பெருமை உண்டோ ?
பரிவிரக்கம் இல்லாதோர் வாழ்வோர் ஆகார் ;
கழங்கெடுத்தே ஆடுதல்போல் இன்பதுன்பக்
கருத்தாலே கவலையினால் ஊசலாடி
வழங்குமவர் உளமெல்லாம் அழகு பூத்து
வளர்ந்திடுதல் வேண்டுமிது நல்லோர் எண்ணம் ! (5)

பண்பில்லாப் படிப்பினுக்குப் பயனும் இல்லை ;
பார்த்திடிலோ உப்பில்லாச் சோற்றை யொக்கும் ;
நண்பில்லாத் தனித்துயரம் தீதா மன்றோ ?
நலங்கருதும் நெஞ்சுடையீர் வாரீர் ; வாரீர் !
கண்படைத்தோ ரேஇயற்கைத் திருக்கூடத் தாகிக்
கனிபுரியும் இறைமையினில் தோய்வீர் ! அன்பும்
பண்பறமும் பலபடைத்து ஓங்கி வாழ்வீர் !
பாடிடுவீர் '' மனஎழில்தான் வாழி '' என்றே. (6)

பதிற்றென்றும் பரிபாடல்

சி. சுப்பிரமணிய தேசிகர்.

(மலர் 20, இதழ் 6. பக்கம் 357 இன் தொடர்ச்சி)

அங்ஙனமாயின் தனுர்மாதத்தில்வரும் ஆதிரையோடு முடிவு பெறும் அம்பாவாடலைத் தைந்நீர் ஆடுதல் எனக் கூறியதென்னை யெனின்; இங்கே தை என்றது மகரமாதத்தைக் குறித்ததன்று, மகர மாதத்தைக் குறித்ததே எனின்; நனிமாரிப்பிற்குளமாகிய தனுர்மாதத்துள் மகரமாதம் வருமாறு பொருந்தாதாகும். ஆதலால் தை என்றது சாந்திர புஷ்யமாதத்தையே குறித்ததாகும். தனுர்மாத ஆதிரை, தனுர்மாதத்தில் அமாவாசை முன்னும் பூரணை பின்னுமே வருமாயின் சாந்திர புஷ்ய மாதத்தில் வந்ததாகும். அங்ஙனமன்றிப் பூரணைமுன்னும் அமாவாசை பின்னும் வருமாயின் முன்வந்த பூரணை சாந்திர மார்க்கசீரிட மாதத்தில் வந்ததாகும் அதனுடனேயே தனுர்மாத ஆதிரை விழாவும் முடிவுபெறும், ஆதிரைக்குச் சௌர தனுர்மாதத் தொடர்பு இன்றியமையாததென்பது சைவாகமவிதி.

இப்பரிபாடல் பாடப்பட்ட காலத்தில் சாந்திரபுஷ்ய (தை) மாதத்தில் தனுர்மாத ஆதிரை வந்திருத்தல் வேண்டும். அதனுடன் முடிவுபெற்ற அம்பாவாடலைத் தைந்நீராட்டல் எனக் கூறியது அதுபற்றியேயாகும். நாம் வழங்கும் சௌரமாதப் பெயர்கள் சாந்திரமாதப்பெயர்கள் திரிந்தனவும் அவற்றின் மறு பெயர்களுமாகும். அதனால் நம் முன்னோர்கள் ஒரு காலத்துச் சாந்திரமாத வழக்கையே உடையவர்களாக இருந்து, பின்னர் சௌரமாதங்களுக்கு அச் சாந்திர மாதப் பெயர்களையே இட்டு வழங்கலாயினரோ ! என எண்ண இடமுண்டாகிறது. ஸ்ரீராம ஜயந்தி சைத்திர சுக்கில நவமியிலாகும். அதனைக் கல்வியிற் பெரியரான கம்பர் ''மேடமாமதி தீதி நவமி'' எனக் கூறுகின்றார். மேட மாதத்தில் சில காலத்துச் சைத்திர சுக்கில நவமி வாராது மீன மாதத்தில் வருதலுமுண்டு. (விளம்பி ஆண்டில் சைத்திர

சுக்கில ஸ்ரீராமநவமி வரவில்லை. விகாரி ஆண்டில் மேடமாதத்தில் ஒன்றும், மீன மாதத்தில் ஒன்றுமாக இரண்டுவருகின்றன.) சௌரமாதப் பெயர்களையும் சாந்திரமாதப் பெயர்களையும் சமமானவை எனக் கோள்வதால் இவ்வித நிலைமை உண்டாகிறது.

தனுர்மாத ஆதிரை சாந்திரபுஷ்ய மாதத்தில் வந்த காலத்து அதனுடன் முடிவுற்ற அம்பாவாடலைத் தைந்நீராடல் எனக் கூறலாம். ஆனால் எப்போதும் தனுர்மாத ஆதிரை புஷ்யமாதத்திலேயே வருமெனக் கோள்ளமுடியாது. அது முன்கூறியுள்ளபடி தனுர்மாதத்தில் பூரணை முன்வருமாயின் மார்க்கசீரிஷமாதத்தில் வரும். அவ்வாதிரை விழவுடன் தோடங்கி முடிவுறும் அம்பாவாடலைத் தைந்நீராடல் எனக் கூறமுடியாது எனக.

எங்ஙனம் ஆராய்ந்தாலும் இப்பதினோராம்பரிபாடலில் கூறப்பட்ட அம்பாவாடல் தனுர்மாத ஆதிரை விழாவுடன் தோடங்கி முடிவுற்றமையால் அது திருவெம்பாவையில் கூறப்பட்ட மார்கழி நீராகிய பாவை நோன்பையே குறிப்பதாகும். ஆனல் மணிவாசக அடிகள் ''மார்கழிநீர்'' என அருளியது மார்க்கசீரிஷ மாதத்தில் தனுர்மாத ஆதிரை வந்த காலத்திலாகாதோ எனின்; நன்று. மார்க்கசீரிஷ மாதத்தில் வந்த காலத்து மார்கழிநீர் எனவும், புஷ்ய மாதத்தில் வந்த காலத்துத் தைந்நீர் எனவும் ஆன்றோர்களால் ஆளப்பட்ட அம்பாவாடல் தனுர்மாத ஆதிரையோடு தோடர்புடையதேயாகுமேன்க.

இன்னும் சாந்திரமாதங்களை அமாந்தமாகக் கொள்ளாது பூர்ணிமாந்தமாகக் கோள்வாரும் உளராதலின், தனுர்மாத பூர்ணிமையின் பின் முடிவுறும் அம்பாவாடலைப் புஷ்ய மாதத் தோடக்கத்தில் முடிந்தமை பற்றித் தைந்நீர் எனக் கூறலாகாதோ எனின்; ஒருநாள் மட்டும் புஷ்யமாதத்தில் வந்தமை கோண்டு தைந்நீரெனக் கூற அமையாதேன்க.

ஆனல், தனுர்மாத பூர்ணிமாந்தத்துத் தோடங்கும் புஷ்ய மாதத் தோடக்கத்திலேயே அம்பாவாடலாகிய தைந்நீர் தோடங்கப் படுவதாகக் கோண்டாலேன்னையெனின்; அது (துலாக் காவேரி போல) மகரமாத பூர்ணிமாந்தம்வரை ஆடப்படுவதாய், தனுர்மாத ஆதிரைவிழவோடு தோடர்பில்லாததாய்ப் பிறிதோன்ருகுமேன்க. இப் பரிபாடலில் கூறப்படும் அம்பாவாடலாகிய தைந்நீர் ஆதிரைவிழவோடு தோடர்புடைமையால் இது அதனின் வேருனதாகும்.

அங்ஙனமாயின் கலித்தொகை முதலிய சங்கச் செய்யுட்களில் கன்னியர் மழையும் மணமும் வேண்டியாடும் அம்பாவாடலைத் தைந்நீர் என்றே கூறப்பட்டுள்ளதேயெனின்; அது ஒன்றனை ஒன்று பின்பற்றி, முன்கூறியுள்ளபடி புஷ்ய மாதத்து வந்த காலத்துப் பாடப்பட்ட என்றே கொள்ளல் வேண்டுமென்க. அல்லது ஆதிரைவிழவினை முன் அருளிச்செய்த ஆளுடைய பிள்ளையார் "நெய்ப்பூசு வெண் புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்-தைப்பூசம்" எனப் பின் அருளிச்செய்தவாறு ஆதிரை நாள் அம்பாவாடல் வேறு தைந்நீர் வேறு எனல் வேண்டுமென்க.

இனி; தாயருகா நின்று ஆடுதலால் அம்பாவாடல் எனப் பெயராயிற்றெனல் அமையாது. அம்பாவாடலுக்குத் தாயரும் உடன்சென்று அருகாநிற்க ஆடல்வேண்டுமென்னும் நியதியில்லை. அம்பாவாடல் - உமையம்மையாரை வழிபடக் கன்னியர் ஆடும் நீராட்டு. கன்னியர் நீராட்டளவில் அமைந்திலர், "முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப் - பனிப்புலர்பு ஆடி" உமையம்மையாரை வழிபட்டனர். அம்பா என்பதற்குத் தாய் என்னும் பொருளுமுளதாயினும் அஃது இங்கே பொருந்துமாறில்லை. தாய் என ஒருமை கூறியது "ஏவல் இளையர் தாய் வயிறு கரிப்ப" என்பதிற்போலும் எனக் கொண்டாலும் "தாயருகா நின்று" என்பதுபோல அம்பா அருகாநின்று ஆடல் என்னுது "அம்பாவாடல்" என்றலால் அது பொருந்தாமை காண்க.

இக்கட்டுரைக்கணுள்ள வான சோதிடநூற் குறிப்புகள், காரைநகர் - பிரசித்த நொத்தாரிசு - பிரமஸ்ரீ. கா. சி. மஹேச சர்மா எவ். ஆர். ஏ. எஸ். அவர்களால் உதவப்பட்டன. அவர்களுக்கு எனது உள்ளம் நிறைந்த நன்றி உரியது.

பன்னெறி விளக்கம்

பெருநாவலர். சே. செல்வப்ப முதலியார்

மாகாப் புடையது மங்கையர் கற்பு மலிகடல்சூழ்
பூகாப் புடையது மன்னர்செங் கோனிலை புண்ணியஞ்சே
ராகப் புடையது பேராயர் தங்குழு வம்புவியிற்
சோகாப் புடையது நாகாப்ப தில்லது சுந்தரியே. 83

உடல் வளர்க்கும் மூலிகைகள்

கடலூர், V. பலராமையா B. A., B. L.,

மலர் 20, இதழ் 6, பக்கம் 352 இன் தொடர்ச்சி)

குழந்தைகளுக்கு இஞ்சி சுரசம்:- இஞ்சி சுரசமெடுத்து கொதிப்பித்து தேன் சமஎடை கூட்டி, மார்சளி, நெஞ்சுசளி, முதலிய கபக் கோளாறுகளுக்குக் காலை மாலை ஒரு சங்கு கொடுத்தால் 3 வேளைகளில் குணமாகும். காய்ச்சலிருப்பின் காய்ச்சலுமிறங்கும்.

சுக்கு எப்படி எலுமிச்சம்பழச் சாற்றில் ஏழுமுறை சுத்தி செய்யச்சொல்லப்பட்டிருக்கிறதோ அதேபோன்று இஞ்சியையும் செய்து வைத்துக்கொள்ளலாம். வேண்டிய போதெல்லாம், ஒன்றிரண்டு சிடிகைகள் வாயிலிட்டு நீர் சாப்பிடலாம். வெகு ருசியாகவுமிருக்கும். ஒருமுறை சாப்பிட்டவர்கள் அடிக்கடி சாப்பிட வேண்டுமெனும் உற்சாகமிருக்கும்.

குறிப்பு:- இஞ்சியின் சுரசத்தில் கற்கண்டு தூள் கொஞ்சம் சேர்த்து இரண்டு அவுன்ஸுகள் சாப்பிட ஹிருதயத் துடிப்பு (Heart Palpitation) 2 நிமிஷங்களில் நிற்கும். (A specific for heart Palpitation) கற்கண்டு தூள் சேராமலும் சாப்பிட லாம். பல நாட்கள் இந்தச் சுரசத்தைச் சாப்பிட்டுவர ஹ்ருதய வீக்கம், (Enlargment of the heart) குறைந்து ஆரோக்கிய நிலையைப்பெறும். ஹிருதய வீக்கத்தினுல் கால்களில் நீர் இறங்கிப் பல ஊசிகள் போடப்பட்டும் குணமாகாத ஒருவர் இஞ்சி சுரசம் காலை மாலை 40 நாட்கள் உண்டு பூரண குணம் பெற்றுள்ளார்.

இஞ்சியைப் பிரதிதினமும் மோரில் தட்டிச் சேர்த்து சாப்பிடு தல் நன்று.

யுசாவுவான், ஒருவர், தம்பிரானுர் (இறைவனுர்) திருவருள் எத் தன்மைத்தென்று மாயாவாதியைக் கேட்ப அவர் அறைந்ததை எண்மருள் ஒருவர் மறுப்பப் பின்னர், அவருள்ளேயே ஒருவரை யொருவர் மறுத்துரைத்துத் தத்தங் கொள்கையினை வினவிய வர்க்கு விளம்பினர். அவர்கள் கூறிய கொள்கைகளை அவரவர் சங்கற்பங்களாகவைத்து அவற்றினை யளாவியோரைத்தஞ்சிவப் பிரகாசம் பயின்று யுண்மை யுணரல் தகுமென்று உமாபதிசிவம் யவர்க்கறிவுறுத்தப் பேற்றதே இந்நூலிலடங்கிய பொருளாகும்.

இந்நூற்கண் மறுக்கப்பெற்ற சமயங்கள் எட்டாகும். அவையாவன:- (1) மாயாவாதம் (2) ஐக்கியவாதம் (3) பாடா ணவாதம் (4) பேதவாதம் (5) சிவசமவாதம் (6) சங்கிராந்த வாதம் (7) ஈசுவர அவிகார வாதம் (8) நிமித்தகாரணபரிணும வாதம் சைவ வாதம் என்பனவாம். சைவவாதம் என்பது சுத்த சைவம் என்னும் ஒர் அகச்சமயமாகும். சைவசித்தாந்த சமய மன்று.

அஃது, ஆன்மாசகலாவத்தையிலே அறிவாயறியுமென்றும், அந்த வறிவையே சரியை கிரியை யோக முற்றியவீடத்துக் கடவுளுதவுகின்ரு ரேன்றுங் கூறுவது. கேவலத்திலான்மா வறிவில்லாமலிருக்குமென்ற கோள்கையுடையது. சேந்தமிழ் நயமிக்க ஆசிரியப்பாக்களால் அமைந்திருக்கின்றது.

சிவதருமோத்தரம், சைவசமயநேறி புவனகோசமுதலிய நூல்களை யாத்த மறைஞானசம்பந்த நாயனுரால் செய்யப் பேற்ற சங்கற்ப நிராகரணம் என்ற நூலுமோன்றுண்டு. முற்றுங் குறட் பாக்களால் யாக்கப்பேற்றுளது. குறட்பாக்களால் நிராகரணஞ் செய்யும் செயல், பாராட்டற்பாலதாயுள்ளது. நானூற்றிருபத்து நான்கு குறட்பாக்களையுடையது. சரசுவதிமால் நூல்நிலையச் சுவடியினின்றும் வேளிவருந் தருவாயிலுள்ளது. துறைசை ஆதீனத்தினின்றும் வேளிவந்துமுள்ளது.

ஈண்டு, எடுத்துக்கோள்ளப்பேறுவது இதுவன்றதுவேயாம் சமயங்கள். புறப்புறம், புறம், அகம்புறம், அகம் எனச் சமயங்கள் நால்வகைப்படும். போதுவுஞ் சிறப்பெனவும் படும் வேதசிவாகமங்களைப் பிரமாணமாகக் கோள்ளாமற் கூறுவது புறப்புறம். வேதத்தையுடன்பட்டு சிவாகமத்தினைக்கோள்ளாதது

புறம். வேத சிவாகமங்களை உடன்பட்டு அவற்றோடு அவற்றி னுக்கு மாறாகவுள்ள பசுநூல்களை அளவையாகக் கொண்டுரைப் பது அகப்புறம். வேதசிவாகமங்களைச் சிறந்த அளவைகளாகக் கொண்டு முத்திநிலைகளில் மாறுபட்டுரைப்பது அகமாகும்.

சங்கற்ப நிராகரணம்

நம்பனீன்றருளிய உம்பன்மாமுகத்தேந்தைபரமனை அமை யாக் காதலோடு உமாபதிசிவம் எங்ஙனம் வழுத்திச் செல் கின்றனர் எனலையாய்வோம்.

விநாயகர் வணக்கம்

அகவற்பா

திருந்திய வருந்தவம் பொருந்துபன் முனிவர்
கமையாக் காத லமையாது பழிச்சு
நிகரில் செக்கர்ப் புகர்முகத் தெழுந்த
புனிற்று வெண்பிறைத் தனிப்பெருங் கோட்டுத்
தழைசெவி மழைமதப் புழைநெடுந் தடக்கை
வாட்டரு மும்மை நாட்ட நால்வாய்ப்
பாச மங்குசந்தேசுறு மெயிரோண்
கனியிவை தாங்கும் புனித நாற்கரத் (து)
அங்கதங் கடகம் பொங்கிழை யாரம்
நிறைமணிச் சுடிகைக் கறையணற் கட்செவி
கொண்டதிண்பெரும் பண்டிக் குறுந்தாட்
களிறுத னிருகழல் கருதா
வெளிறுறு துயரம் வீட்டினம் பெரிதே ''

கணபதி வணக்கம் பண்டுதொட்டு வருவதுமாம் எனல் சங்க நூல்களைச் சங்கையறப் பயின்றோர்க் கினிது புலனும். திருமந்திர காரரும்.

'' ஐந்துகரத்தனை யானைமுகத்தனை
இந்தினிளம்பிறை போலுமெயிற்றனை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில்வைத்தடி போற்றுகின்றேனே ''

எனப் பாடியிருத்தல் ஆராய்தற்பாலதாகும். இப்பாட்டு அருவமும் உருவமும் அருவுருவுமாகிய பரம்பொருளாம் மூலப் பொருளைக் குறித்து வணக்கங்கூறிற்று. " முப்புரமெரிசெய்த அச்சிவனுறை ரதம் அச்சது பொடிசெய்த அதிதீரன் " எனத் துதித்தனர் புகழ்காரர். பண்டுசெய் புண்ணியத்தால் இயல்பாற் றிருந்திய செயற்கரும் பெருந்தவம் வாய்ப்புற்ற இருடிகணங்கள் ஒன்றுகூடி ஒரு தானுநிரம்பாத அவாவுடன் எப்போதும் துதிக்கும்களிறு. உவமையில் சிவந்த புள்ளி பொருந்திய முகத்தின்கண் முளைத்த இளைய வெள்ளிய பிறைபோலும் ஒப்பற்ற பெரிய ஒற்றைக்கொம்பினையும் தழைத்த முறம்போலும் செவிகளையும் மழைபோற்சொரியும் மதத்தினையும் துவாரம் பொருந்திய நீண்டபெரிய துதிக்கையினையும் (இக்கை ஞானேந் திரியகன்மேந்திரியமாக வனையப் பெற்றுளது.) ஒளிவீசும் அளிதரு முச்சுடர்களாகிய (வாட்டமில்) நாட்டங்களையும் தொங்குகின்ற வாயினையும். பாசமும், அங்குசமும் பாதம் வரைந்த வொளியுறு எழுத்தாணியாகிய கொம்பும் ஞானக்கனி யாகிய மாங்கனியும் நிரலே ஏந்தும் நாற்கரங்களாயும் அங்கதம் (மேகலை) வளையம், ஒளிவீசும் அணிகலன் இரதனமாலை முதலியனவும் உடைய களிறு: நாகரத்தினத்தினைத் தலையி லுடைய நஞ்சம் பொருந்திய கட்செவியாகிய பாம்பினைஉதர பந்தனமாக் கொண்ட உலகெலாமடங்கிய பேழைவயிற்றினையும் குறுகிய திருவடிகளையும் உடைய களிறு ஆகிய பெருமான்றன் இருதிருவடிகளையும் எல்லாவினையு நீங்கியுய்வான் நினைத்து, குற்றமுறு பிறவிப்பெரும் பிணியினை மிகவும் யாம் அழித் தொழித்தோம் என்க. இந்நேரிசையாசிரியம் பொழிப் பெதுகை யும் பொழிப்பு மோனையும் பொருளாழமும், குறித்த பொருளைக் குறித்தாங் குணர்த்தும் கோதினற் சொற்களுமுடைத்து எனக் கொள்ளக்கிடக்கின்றது. ஐந்தொழிலாடல்செய் மைந்துடைப் பரமன் போன்றைங்கரக்கடவுளும் தேவதேவன், செவ்வானம் புரைசெம்மேனியன், ஒருகொம்புடைமையின், அம்மையப்பன். முக்கட்பரமன். களிற்றுமுகமுடைமையின் ஓங்காரத்தொருவன், பிறவிப்பிணியாதிய பலதுயரும் போக்கும் பண்புறு சிறப்புறு தலைவன் (விநாயகன்) ஒருநாமமோருருவு மில்லாற்குப் பல நாமங் கூறிப் பழிச்சினர் என்பதும் புலனாகாநிற்கும். இங்ஙன மாகவே மேல்வரும் பாயிரமுதலிய பாக்களுமுடைத்தென்றற்குச் சிறிது எடுத்தாயவேண்டியதாயிற்று. (தொடரும்)

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

முதல் திருநாள் 26—5—61 வெள்ளிக்கிழமை :

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலயம் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், 'சிவஞானபோதம்' என்ற தலைப்பிலும். நாகப்பட்டினம், தேசிய உயர்நிலைப்பள்ளி, தலைமைத் தமிழாசிரியர், தருமையாதீனப் புலவர், வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர், 'திருக்கோவையார்' என்ற தலைப்பிலும், ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான், சிரோமணி, திரு. வி. சபேசன், 'ஞானத்தமிழ்' என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினார்கள்.

சிவஞானபோதம் மெய்கண்டாரால் அருளிச் செய்யப்பெற்ற ஞானசாத்திரம் என்றும், நான்கியல்களும் பன்னிரண்டு சூத்திரங் களும் உடையதென்றும், அதன்வழியெழுந்ததே சித்தியார் என்றும் விளக்கினார்கள். திருக்கோவையார் எட்டாந் திரு முறையில் உள்ளதென்றும், அகப்பொருள் நூலாயினும் அறம் உரைக்கும் நூல் என்றும், மணிவாசகர் அனுபவநூல் என்றும் கூறினார்கள். ஞானத்தமிழ் திருஞானசம்பந்தரால் அருளிச் செய்யப்பெற்றதென்றும், நம்பியாண்டார் நம்பிகள் பதினோராம் திருமுறையில் இந்தச் சிறப்புத் தொடரை அருளியுள்ளார்கள் என்றும், ஞானத்தமிழ் பயின்று ஞாலம் இன்புறுக என்றும் உரைத்தார்கள்.

இரண்டாம் திருநாள் 27—5—61 சனிக்கிழமை :

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானம் கட்டளை விசாரணை, வித்துவான், ஸ்ரீமத். முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள், 'உண்மைநெறிவிளக்கம் - கொடிக்கவி' என்ற நூல்களைப் பற்றியும், தருமையாதீனம் ஸ்ரீ குருஞான சம்பந்தர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியை, வித்துவான். திருமதி. ப. நீலா, 'சுந்தரர் செந்தமிழ்' என்ற பொருளைப்பற்றியும் சொற் பொழிவாற்றினார்கள்.

மெய்கண்ட சாத்திரங்களில் உண்மைநெறி விளக்கம் கொடிக்கவி என்னும் இரண்டும் உள்ளவை என்றும், தசகாரியம் கூறும் சிறப்புடையது உண்மைநெறி விளக்கம் என்றும், உண்மைநெறியை விளங்கிக்கொண்டாலன்றி ஞானம் பிறவா தென்றும் பேசினார்கள். சுந்தரர் செந்தமிழ் வரலாறு, கற்பனை அருள்வளம் முதலியவற்றால் சிறந்ததென்றும் இஃது இன்றேல் சைவ உலகில் நாயன்மார் வரலாறுகள் பின்னே விளங்கித் தோன்ற வழியில்லை என்றும் பேசினார்கள்.

மூன்றாந் திருநாள் 28—5—61 ஞாயிற்றுக்கிழமை :

திருக்கடவூர். ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம், கட்டளைவிசாரணை, வித்துவான், ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள், 'சிவபோகசாரம்' என்ற பொருளிலும், தஞ்சை, சரஸ்வதிமகால், தமிழ் ஆராய்ச்சியாளர், தருமையாதீனப் புலவர், பண்டித வித்துவான், திரு. இராமகோவிந்தசாமிப் பிள்ளை, 'திருக்களிற்றுப்படியாரும்-இருபாஇருபஃதும்' என்ற நூல்களைப் பற்றியும், தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப் பள்ளி ஆசிரியை, திருமதி. ப. வசந்தா, 'குமரகுருபரர் அருணூல்கள்' என்ற பொருளிலும் பேசினார்கள்.

சிவபோகசாரம் குருஞானசம்பந்தப் பெருமான் பாடிய திருநூல் என்றும், தத்துவ விளக்கம், அனுபூதிமாட்சி, குரு தரிசனம் முதலிய பல நிலைகளில் ஞானசாத்திரமாக இது விளங்குவதென்றும் குறிப்பிட்டார்கள். திருக்களிற்றுப்படியாரும் இருபா இருபஃதும் பயின்று சாத்திர சம்பிரதாயங்களை உணர்வது சைவ உலகின் கடன் என்றும் உரைத்தார்கள். குமர குருபரர் அருள்நூல்கள் எல்லாவகையானும் சிறப்புற்றவை என்றும், கந்தர் கலிவெண்பா முதலிய அம்முனிவர் நூல்கள் அருள்நலம் கனிந்தவை என்றும் விளக்கினார்கள்.

நான்காந் திருநாள் 29—5—61 திங்கட்கிழமை :

தருமையாதீனம், ஸ்ரீமத். சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகள், 'முத்துக்குமாரசுவாமி திருவருட்பா' என்ற நூல் குறித்தும், கோயம்புத்தூர், நிர்மலா கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், 'செந்தமிழ்ச்செல்வி', புலவர், திருமதி. சி. குழந்தையம்மாள், M. L. A. 'மணிவார்த்தை' என்பதுபற்றியும், தேவகோட்டை,

தருமையாதீனப் புலவர், வயிநாகரம், பாலகவி, திரு. வே. இராம நாதன் செட்டியார் 'உண்மைவிளக்கம் - துகளறுபோதம்' என்ற நூல்கள் குறித்தும் பேசினார்கள்.

முத்துக்குமாரசுவாமி திருவருட்பா அருள்நலம் விளக்கும் தோத்திரநூல் என்றும் அதனைப் பாராயணம் செய்து பயன்பெறு வோர் இன்றும் பலர் உளர் என்றும் கூறினார்கள். மணிவார்த்தை என்பது திருவாசகத்தையே குறிக்கும் என்றும், திருவாசகத் திலேயே இத்தொடர் பயின்று வருகிறதென்றும், மணி வார்த் தையைப் பயின்று மனமுருகி வாழ்வின் நற்பயன் பெறுதல் சைவர் கடன் என்றும் குறிப்பிட்டார்கள். உண்மை விளக்கமும் துகளறு போதமும் மெய்கண்ட சாத்திரங்களில் சிறந்து விளங் குவன என்றும், உண்மை விளங்கத் துகளறுதல் வேண்டும் என்றும் கூறி இவ்விரு நூல்களின் நல்லபல பாடல்களைக் குறிப்பிட்டு விளக்கி முடித்தார்கள்.

ஐந்தாந் திருநாள் 30—5—61 செவ்வாய்க்கிழமை :

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர், செஞ்சொற்கொண்டல், வித்துவான், திரு. சோ. சிங்கார வேலன் B. A. 'சங்ககாலச் சமயநிலை' பற்றிச் சொற்பெருக் காற்றினார்கள்.

சங்க காலத்தில் சமய பேதங்கள் இருந்த போதிலும், ஒன்றற்கொன்று மாறுபட்டுப் பூசல் இடவில்லையென்றும், சைவம் வைணவம் முதலிய எல்லாச் சமயங்களும் ஒன்று பட்டு அமைதியாக நிலவின என்றும், நற்றிணை, அகம், கலி முதலிய நூல்களிலுள்ள பாடல்களால் இது நன்கு விளங்கு கின்றதென்றும், எனவே சங்ககாலச்சமயம் முழு அன்புச் சமயமே என்றும் விளக்கிச்சான்றுகள் பலதந்து நிறுவினார்கள்.

ஆறுந் திருநாள் 31—5—61 புதன்கிழமை :

சீகாழி, ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், கட்டளை விசாரணை, வித்துவான், ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், 'திருவுந்தியார்' என்ற தலைப்பிலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகக் கல்வெட்டாராய்ச்சி விரிவுரையாளர், 'கல்வெட்

டாராய்ச்சிக் கலைஞர்', வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார், 'கல்வெட்டில் இலக்கியங்கள்' என்ற தலைப்பிலும் பேசினார்கள்.

திருவுந்தியார் மெய்கண்ட சாத்திரங்களில் பழமைவாய்ந்த தென்றும், அதனுள் சுருங்கிய நிலையில் பல கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன என்றும், உய்யவந்த தேவரின் ஒப்பற்ற அருட்பனுவல் உந்தியார் என்றும் விளக்கிப் பேசினார்கள், கல்வெட்டுக்களில் இலக்கியங்கள் பல உண்டு என்றும். அவற்றைக்கண்டு அக்கால மக்கள் அறிவுநுட்பம் தெளியலாம் என்றும், திரிசிராமலை அந்தாதி முதலிய பல நூல்கள் கல் வெட்டுக்களாகி நின்று உலகிற்கு என்றும் துணைபுரிந்து வருகின்றன என்றும் அழகுறச் சான்றுகள் பலகாட்டி உரைத்தார்கள்.

ஏழாந் திருநாள் 1—6—61 வியாழக்கிழமை :

கலைமகள் ஆசிரியர், செந்தமிழ்ச்செல்வர், வாகீசகலாநிதி, வித்துவான், திரு. கி. வா. ஜகந்நாதன் M. A., 'பதினோராம் திருமுறை' என்ற பொருளிலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மெய்ப்பொருளியல் விரிவுரையாளர், திரு. சி. இராம லிங்கம் M. A., 'போற்றிப்பஃறொடை - வினாவெண்பா' என்ற பொருளிலும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் 'திருமந்திரம்' என்ற பொருளிலும் விரிவுரையாற்றினார்கள்.

பதினோராம் திருமுறை இறைவனது முழுமுதற் பாட்டை முகப்பில் உடையதென்றும், ஏகாதச மாலை அமைந்துள்ள சிறப்பு இதற்கே உரியதென்றும், ஈங்கோய் மலைபற்றி நக்கீரர் பாடுவது சிறப்புடையது என்றும், அம்மையார் பாடல்களில் "நினையா தொழிதி கண்டாய்" என்னும் பாடல் தற்கால ஆராய்ச்சியாளர்க்கோர் அறிவுரை என்றும் விளக்கித் தெளிவுறப் பல சான்றுகளோடு ஆராய்ச்சியுரை நிகழ்த்தினார்கள். போற்றிப் பஃறொடை - வினாவெண்பா என்ற இருநூல்களைப் பயின்று சாத்திர நெறியில் வரும் ஐயம் அறுத்துத் தெளிவுபெறச் சைவர் முந்துதல் வேண்டும் என்றும், இவ்விரு நூல்களும் உள்ளத் திருக்கினை ஒட்டும் உயர்வுடையவை என்றும் விளக்கினார்கள்.

திருமந்திரம் பத்தாம் திருமுறையாக நின்று யோகநிலைகளை விளக்கும் ஒப்பற்ற திருநூல் என்றும், சிறு சிறு கதைகளைக் கூறுவதுபோன்று பெரும் பேறும் கருத்துக்களைத் தெளிவாக்கு வது திருமூலர்க்கு இயல்பு என்றும், பல பாடல்களை மேற் கோளாகக் காட்டி விளக்கிப் பேசினார்கள்.

எட்டாந் திருநாள் 2—6—61 வெள்ளிக்கிழமை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம். தமிழ்த்துறைத் தலைவர், 'பல்கலைச்செல்வர்' திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் M A., B.L. M. O. L. 'அத்வைதம்' என்ற தலைப்பிலும், சென்னை, திருமதி. T. N. அனந்தநாயகி B. A,, B. L., M. L. A. 'சமய இலக்கிய வளர்ச்சி' என்ற தலைப்பிலும், சென்னை, சுகப்பிரும்மம், பிர்ம்மஸ்ரீ. எஸ். இராமசாமி சாஸ்திரிகள் 'உபநிஷத்தும் திரு முறையும்' என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினார்கள்.

அத்வைத நெறியில் சைவசித்தாந்தம் சுத்தாத்வைதம் எனப்பெறும் என்றும், விசிஷ்டாத்வைதம் வைணவம் ஆகும் என்றும், அத்வைத நெறியில் [பிரும்ம சூத்திரத்தின் உரைகள் வேறுபட்ட வகைகள் இன்னின்ன என்றும் தெளிவாகக்கூறிச் சைவ சமயத்தின் சிறப்பைத் தம் பேருரையில் நிறுவிக் காட்டி னார்கள். சமய இலக்கிய வளர்ச்சியில் திருமுறைகள், புராணங்கள் முதலியன வளர்ந்த வகைபற்றி விளக்கி இன்றைய உலகில் தமிழன் சமய இலக்கியம் பற்றி அறிந்து கொள்ள வேண்டிய கடமைகளையும் கூறி விரிவுரை நிகழ்த்தி னார்கள். உபநிஷதக் கருத்துக்கள் எவ்வாறு திருமுறைக் கருத்துக்களுடன் ஒத்து வருகின்றன என விளக்கித் தேவாரம் வேதசாரம் என்பதை நிறுவினார்கள்.

ஒன்பதாந் திருநாள் 3—6—61 சனிக்கிழமை :

தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி, முதல்வர் 'செந்தமிழ்ச் செம்மல்' திரு. அ. சீனிவாசராகவன் M. A. 'விசிஷ்டாத்வைதம்' என்ற பொருள்பற்றியும், கோவை, திரு. N. கிரிதாரி பிரசாத் B. A. B. L. P. P. A. (Dip) 'உலகத் தத்துவங்கள்' என்ற பொருள்பற்றியும், திருநெல்வேலி, ம. தி. தா. இந்துக் கல்லூரி, தமிழ்த்துறைத் தலைவர், இராவ்சாகிப், வித்துவான், திரு.

கு. அருணுசலக் கவுண்டர், 'அருட்சக்தி' என்ற பொருள்பற்றி யும் சொற்பெருக்காற்றினுர்கள்.

வைணவ நெறியை விசிஷ்டாத்வைதம் என வழங்குதல் வழக்கென்றும், இதன் தத்துவக் கோட்பாடுகள் இன்னின்ன என்றும் பதி உண்மை கூறுவதில் நம்மாழ்வார் முதலிய ஆழ்வார் பெருமக்கள் காட்டிய நெறி என்ன என்றும், பல பாடல்களைச் சான்றுகாட்டி அழகுறத் தமிழ் நயம் பொருந்தப் பேசினுர்கள். உலகத் தத்துவங்களில் நம் சமயத் தத்துவச் சிறப்பு இன்ன தென்றும், விஞ்ஞான உலகம் நம்மை யெவ்வாறு எதிர்நோக்குகின்ற தென்றும் ஆராய்ந்தார்கள். சக்தி வழி பாட்டில் வடநாடும் தென்னுடும் கூறும் தத்துவக் கூறுபாட்டை விளக்கிச் சக்தி தத்துவத்தை இனிது எடுத்துக்காட்டிச் சிறப் பான மேற்கோள்களுடன் ஓர் அழகிய சிறப்புரை நிகழ்த்தினுர்கள்.

பத்தாந் திருநாள் 4—6—61 ஞாயிற்றுக்கிழமை:

சென்னை வானொலி நிலயம், சொற்பொழிவு அமைப்பாளர், திரு. மீ. ப. சோமசுந்தரம் 'கவிதை இலக்கியங்கள்' என்ற தலைப்பிலும், சென்னை அரசாங்கப் பொதுத்துறை, உதவி நெறியாளர், (மொழிபெயர்ப்பு) திரு. அ. ச. ஞானசம்பந்தம் M. A. 'பெரியபுராணம்' என்ற தலைப்பிலும், சென்னை அரசு, 'ஆட்சி மொழித் தனி அலுவலர், 'ஆட்சிச் சொற்காவலர்' திரு. கீ. இராம லிங்க முதலியார், M. A. 'சமயமும் நோன்பும்' என்ற தலைப் பிலும், சென்னை பின்னி கம்பெனி, ஏற்றுமதி இறக்குமதி அலுவலர் செஞ்சொல்மாமணி, திரு. ச. சிவகுமாரன், M. A. 'குருபீடங்கள்' என்ற தலைப்பிலும், திருச்சி, பொன்னையா உயர் பள்ளித் தமிழ் ஆசிரியர் திருமுறைக் கலைஞர், வித்துவான், திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார் 'அடியார் பெருமை' என்ற தலைப்பி லும் சொற்பொழிவாற்றினுர்கள்.

கவிதை இலக்கியம் சிறப்புடையதென்றும், கவிதைகளைப் பாடியுள்ளனர் என்றும் கூறித் திருமூலர் திருமந்திரத்திலிருந்து ஒரு பாடலைக்கூறி விளக்கி, அதன் சிறப்புக்களை உணர்ந்து பயன்பெற வேண்டும் என்று கூறி முடித்தார்கள். பெரிய புராணம் பலதத்துவங்களை விளக்குவதென்றும், மனநிலை குறித்த உணர்ச்சி அந்நூலைப் பயிலுங்கால் நமக்கு வேண்டும்

என்றும், செயலுக்கு அடிப்படையாகும் சிந்தையில் தூய்மை வேண்டும் என்றும் கூறிக் கண்ணப்பர், சிறுத்தொண்டர், மனுநீதி முதலிய வரலாறுகளைக்காட்டிப் பேசினார்கள்.

சமயமும் நோன்பும் பற்றிப் பேசுகையில் நோன்புகளை மேற்கொண்டு சமயம் காக்கவேண்டும் என்று ஆடவர் பெண்டிர் அனைவரையும் வேண்டிச் சிறப்புறப் பேசினார்கள். குருபீடங்களிடம் சீடர்கள் கொள்ளவேண்டிய பக்தியை விளக்கி, மற்ற மதத்தினர்கள் கொண்டொழுகும் அன்புத் திறத்தைக் குறித்துக் காட்டி அழகுறப் பேசினார்கள். அடியார் பெருமை அளவிறந்ததெனவும், தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிது என்றும் சங்கம பக்திச் சிறப்பை ஆராய்ந்து நிறுவினார்கள்.

வேங்கடம் முதல் குமரிவரை என்ற நூலின் இரண்டாம் தொகுதியை அதன் ஆசிரியர் திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் I. A. S. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்திற்குச் சமர்ப்பணம் செய்து விரிவுரை யாற்றுகையில், ஆதீனக் கோயில்களில் எட்டுப்பற்றி இத்தொகுதியில் இடம் பெற்றிருப்பதாகவும் இதனைச் சமர்ப்பிப்பதில் தாம் மிகப் பெருமையும் மகிழ்ச்சியும் கொள்வதாகவும் கூறினார்கள்.

பட்டணப்பிரவேசத் திருநாள் 5—6—61 திங்கட்கிழமை :

திருவையாறு, ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம், கட்டளை விசாரணை, ஸ்ரீமத். விசுவலிங்கத் தம்பிரான் சுவாமிகள் 'முத்திநிச்சயம்' என்ற தலைப்பிலும், திருச்சி மத்திய கூட்டுறவு பாங்கி செயலாளர், திருக்குறள்வேள், திரு. கு. வரதராச பிள்ளை B. A. 'குருவழிபாடு' என்ற தலைப்பிலும், தாம்பரம். கிறிஸ்தவர் கல்லூரி தமிழ்விரிவுரையாளர் புலவர், திரு, N. R. முருகவேள், M. A., M. O. L. 'சைவத்தின் தொன்மை' என்ற தலைப்பிலும், சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், தருமையாதீனப் புலவர், வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை 'புராண இலக்கியம்' என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினார்கள்.

முத்தி நிச்சயம் 22 வெண்பாக்களைக்கொண்ட ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளின் திருநூல் என்றும்,

இதனை இனிது பயின்று சைவ சித்தாந்தத்தில் முத்திநிலை குறித்து அறிந்துகொள்ளுதல் நம்கடன் என்றும் உரைத்தார்கள். குருவழிபாடு சீடர்கள் உய்வதற்கு வழி என்றும், குருவழிபாட்டால் உய்ந்து இருமைப்பயனும் எய்துதல் அறிவினுன் ஆய பயன் என்றும் தெளிவுறுத்திஞர்கள். சைவத்தின் தொன்மை மேலை நாட்டவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதென்றும், போப், கால்டுவெல் போன்றோர் இவற்றை தெளிவுறுத்தியுள்ளனர் என்றும், சிந்துவெளி நாகரிகத்தாலும் இது தெளியப்படுவதாகும் என்றும் விளக்கிஞர்கள்.

புராண இலக்கியங்களில் கந்தபுராணம் திருவிளையாடல், பெரியபுராணம் ஆகிய மூன்றும் சிறப்புடையவை என்றும், இவை சோம சூரியாக்கினி என்றும், இவற்றை ஓதி உணர்ந்து பயன்பெற்றுச் சிறப்புறுதல் திருநெறி நிற்கும் மாந்தர் கடன் என்றும் அழகுறப் பேசிஞர்கள்.

இன்னிசை நிகழ்ச்சிகள்

1—6—61 அன்று தருமையாதீன வித்துவான், பாகவதர் எம்பார் ஸ்ரீமத் விஜயராகவாச்சாரியார் திருநீலகண்டர் சரித்திரத்தைக் கதாகாலட்சேஷபமாகக் கேட்போர் மகிழ்வுற நிகழ்த்திஞர்கள். 4—6—61 குருபூசை விழாவன்று மாலை பித்துக்கொளி முருகதாஸ் இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்திஞர்.

5—6—61 அன்று தருமையாதீன வித்துவான், அண்ணமலைப் பல்கலைக்கழக இசைக் கல்லூரித் தலைவர், இசையரசு திரு. M. M. தண்டபாணி தேசிகர் தம் குழுவினருடன் இன்னிசை விருந்தளித்தார்கள்.

மாநாட்டின் ஒவ்வொரு நாள் நிகழ்ச்சியிலும் வரவேற்புரை நன்றியுரைகளை சென்னை (தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையம் வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் கூறிஞர்கள். பேச்சாளர்களைத் தக்க முறையில் அறிமுகம் செய்வித்தும், அவர்களது விரிவுரைகளுக்கு நன்முறையில் விளக்கம் கொடுத்தும் ஸ்ரீமத் சுவாமிகள் அவர்கள் உடனிருந்து நடத்திவைத்தார்கள்.

சிவஞானசித்தியார் பாடவகுப்பு

ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருநாளையோட்டி இவ்யாண்டில் 26—5—61 முதல் 5—6—61 வரை சிவஞான சித்தியார் பாட வகுப்பு நடத்தப்பெற்றது. ஸ்ரீ சோக்கநாதர் பூஜை மடத்தில் நிகழ்ந்த இவ்வகுப்பில் மெய்யன்புடைய மாணவர் பலரும் கலந்துகோண்டு பயன் பேற்றனர். கீழ்வருமாறு வகுத்துக் கோண்டு வகுப்புக்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் நல்லாசிரியரால் நடத்தப்பேற்றன :-

சிவஞானசித்தியார் - பரபக்கம் 26, 27, 28—5—61; வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், (கட்டளை விசாரணை, ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.)

அளவியல், பிராமணவியல் : 29, 30—5—61 தருமை யாதீனப்புலவர், சித்தாந்தக்கலைமணி, வித்துவான், திரு சி. அருணைவடிவேல் முதலியார் (தமிழாசிரியர், பச்சையப்பன் உயர்பள்ளி, காஞ்சீபுரம்.)

இலக்கணவியல் : 31—5—61, 1—6—61 தருமை யாதீனப் புலவர், திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A., L. T., (தலைமையாசிரியர், பச்சையப்பன் உயர்பள்ளி, காஞ்சீபுரம்.)

சாதனவியல், பயனியல் : 2, 3, 5—6—61 ; சைவ சித்தாந்த சரபம். சிவத்திரு. காசிவாசி. ஈசானசிவாசாரியார் (பழநி)

இவ்வாறு நான்கு நல்லாசிரியர்கள் சித்தியார் வகுப்புக் களைத் திறம்பெறத் தேளிவாக நடத்தினார்கள். 30—5—61 அன்று மாலை தேவகோட்டை பாலகவி திரு. வே. இராமநாதன் சேட்டியார் 'தசகாரியம்' கூறும் உண்மைநேறி விளக்கத்தை வகுப்பாக நடத்தினார்கள்.

தாயுமானர்

வித்துவான். மு. இரத்தின தேசிகர்

உலகில் காணப்படும் பொருள்கள் அனைத்தும் ஒருகால் தோன்றும்; ஒருகால் மறையும். இவை அனைத்தும் சுட்டி உணரப்படுவன. சுட்டி உணரப்படாத ஒன்றே பரம்பொருள். பரம்பொருளுக்குத் தோற்றமும் இல்லை, முடிவும் இல்லை. அது காலம் கடந்தது. மனமொழி மெய்களுக்கு அப்பாற்பட்டது. "வாக்கு மனங்கழிய நின்ற மறைப்பொருள்" அது. அதனைத் தோற்றுவிப்பார் யாரும் இல்லை. அது தானாகவே உள்ளது. ஆக்கூரில் இருக்கின்ற இறைவனுக்குத் 'தான்தோன்றிநாதர்' என்பது பெயர். இப்படியிருக்கின்ற அந்தப் பரம்பொருள் ஆணும் அன்று, பெண்ணும் அன்று. ஆயினும் உயிர்களினிடத்து வைத்த கருணையின் காரணமாகத் திருஉருக்கொள்ளும் போது ஆணாகவும் பெண்ணாகவும் காட்சியளிக்கின்றது. "அம்மையே அப்பா" "ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்றும்" "அப்பன் நீ அம்மை நீ" என்பன போன்ற அருள் வாக்குகள் இதனை வலியுறுத்துகின்றன. "தாயுமிலி-தந்தையிலியாக உள்ள அவன் எல்லா உயிர்களுக்கும் தந்தையாகவே இருக்கின்றான். தாயாகவும் இருக்கின்றான். மதுரையில் சோக்கலிங்கப் பெருமான் தாயை இழந்த பன்றிக்குட்டிகளுக்குத் தாயாக வந்தான். அவ்வாறே திருச்சிராப்பள்ளியில் மலைமேல் மருந்தாயுள்ள இறைவன் அன்றொருநாள், தனகுப்தன் என்ற வணிகன் மனைவி வயா நோயினால் வருந்தியபொழுது அப்பெண்ணின் தாயாகத்தோன்றி மகவினைப்பெற்ற அவளுடன் இருந்து உதவினான். அன்றுதோட்டு அப்பெருமானுக்குத் தாயுமானார் என்ற திருப்பெயர் வழங்கலாயிற்று.

தியாகத்தின் முளை :

முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் திருமறைக்காட்டில் கேடிலியப்பப் பிள்ளை என்ற சைவ வேளாளப் பெரியார் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவர் கல்வியறிவு ஒழுக்கங்களில் சிறந்தவர்.

கஜவல்லியம்மையார் என்ற கற்பிற்கு அரசியை மணந்து இல்லறத்தை இனிதின் நடத்திய அவர் அன்று மறைக்காட் டுறையும் மணாளனின் திருக்கோயில் இறைபணியாளராக இருந் தார். அக்காலத்தே அவருக்குச் சிவசிதம்பரம் என்ற ஓர் ஆண் மகவு பிறந்தது. அறிவறிந்த மக்கட் பேற்றினைச் சிறந்த பேருகக்கொண்டு மகிழ்வது மக்கள் இயல்பு. மக்கட்பேற்றினைப் பெருதவரது வாழ்க்கையில் பயன் உறைவதில்லை. படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும் பெருஞ்செல்வராயினும் மக்கட் செல்வத்தைப் பெருவிடின் அவரது வாழ்வு மலர்வ தில்லை. கேடிலியப்பப் பிள்ளையின் முன்தோன்றலாய் அன்று வாழ்ந்த வேதாரணியம் பிள்ளை என்பாருக்கு இந்நிலை ஏற் பட்டது. மக்பேறின்றி வருந்திய அன்னுரது அருந்துயர் களைய எண்ணினுர் கேடிலியப்பப் பிள்ளை. தனக்கிருந்த ஒரு மகனைத் தன் அண்ணனுக்குத் தத்துப்புத்திரனுக (ஸ்வீக்ர புத்திரன்) அளித்து அவரை மகிழ்வித்தார். பல பிள்ளைகளைப் பெற்ருேர் ஒரு பிள்ளையைப் பிறருக்கு அளித்தல் உலக இயல்பு. கேடிலி யப்பப் பிள்ளையோ ஒரு மைந்தன் தன் குடிக்கு உள்ளான் என்பதை உணர்ந்து அம்மைந்தன் தன் மைந்தனுக இருத்த லினும், தன் தமையன் மைந்தனுக இருத்தலே சால்புடைத்து என்ற தியாக மனப்பான்மையுடன் அம்மைந்தனை அண்ணனுக்கு மகனுக்கி மகிழ்ந்தார். இத்தகைய அருள் உள்ளம் படைத்த அவரிடத்தேதான் அடுத்தகான் முளையாகத் தோன்றினுர் தாயுமானுர். மகனுரைக்கும் தந்தை நலத்தை என்றபடி, உலகத்து உயிர்க்கெல்லாம் அருள்மழை பொழியும் அருட் கொண்டலாய் வாழ்ந்த தாயுமானுர் தோன்றுவதற்கு ஏற்ற தகுதிப்பாடு அக்கேடிலியப்பப்பிள்ளை அவர்களிடம் அமைந்தது.

பெண்ணின்பம் விழையா இல்லறத்துறவு :

கேடிலியப்பப் பிள்ளை திருமறைக்காட்டில் வாழ்ந்த நாட் களில், திருச்சியில் இருந்து ஆண்ட முத்துக்கிருட்டிண நாயக்கர் கடலாடுதற் பொருட்டுத் திருமறைக்காட்டிற்கு வந்தார். இறை பணியாளராக விருந்த கேடிலியப்பப்பிள்ளை, நாயக்க மன்னரைச் சிறந்தமுறையில் வரவேற்று ஆவன செய்தார். மன்னனுக்குப் பிள்ளையவர்களிடம் அன்பு தோன்றிற்று. பிள்ளையவர்களின் தகுதியை அறிந்த வேந்தர் அவரைத் திருச்சிராப்பள்ளிக்கு

அழைத்துத் தன் அவையில் பெரிய சம்பிரதி என்ற முதற் கணக்கர் பதவியை அளித்துச் சிறப்புச் செய்தார். முத்துக் கிருட்டிண நாயக்கருக்குப்பின் ஆட்சியில் அமர்ந்த முத்துவீரப்ப நாயக்கரும் பிள்ளையவர்களை அன்போடு பேணிவந்தார். அக் காலத்தில்தான் திருச்சியில் கோயில்கொண்டுள்ள தாயுமானுரின் திருவருளால் வரங்கிடந்த கேடிலியப்பப்பிள்ளைக்குத் தாயுமானுர் மகவாக அவதரித்தார்.

தாயுமானுர் உரிய பருவத்தே கல்விபயிலத் தொடங்கி வடமொழிப் புலமையுடன் தென்தமிழ்த் திறமும் கைவரப் பெற்ருர். உலக நூலோடு அறிவு நூலும் கற்றுக் கடவுள் நெறி நின்ருர். கவிபுனையும் வன்மையுற்ருர். சமயம் விசேடம் முதலிய தீட்சைகளைப்பெற்றுச் சிவபூசை, ஆலயவழிபாடு ஆதிய கருமங் களில் ஈடுபட்டார். முத்துவீரப்ப நாயக்கருக்குப்பின் அவரது மனைவியார் ஆட்சிபுரிந்தார். அவருக்குப்பின் விசயரங்க சோக்கநாத நாயக்கர் ஆட்சிபீடத்து அமர்ந்தார். அப்போழுது கேடிலியப்பப்பிள்ளை இறைவன் திருவடியடைந்தார். தாயுமானு ரின் தகுதியறிந்த வேந்தர்; தந்தையிருந்த பதவியில் தனயனை இருத்தினுர். தாயுமானுர் தலைமைக் கணக்கர் பதவியிலமர்ந்து, திறம்படச் செயல்புரிந்தாலும், அவாது உள்ளம் சிவானந்தப் பெருவாழ்வு எய்துவதையே நாடிநின்றது. "எந்நிலையில் நின்ரு லும் எக்கோலங்கோண்டாலும் மன்னியசீர்ச்சங்கரன்தாள் மற வாத" நிலையினைப் பெற்ருர். "எத் தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்-முத்தர் மனமிருக்கும் மோனத்தே" என்ற வாக்கு அவரிடத்து மெய்யாயிற்று. அக்காலத்தே மலைக் கோட்டை வாயிலில் இருந்த சாரமாமுனிவர் மடத்தில் எழுந் தருளியிருந்த, திருமூலர் மரபினராய மௌனகுருவிடம் உப தேசம் பெற்ருர் தாயுமானுர். இந்த உண்மையினை மௌன குரு வணக்கத்தில் "மந்த்ரகுருவே யோகதந்த்ர குருவே மூலன் மரபில் வரு ஞான குருவே" என வரும் தாயுமானுர் வாக்கே புலப்படுத்துகின்றது. தாயுமானுர் உள்ளம் துறவு பூண விழைந்தது எனினும், குருவின் ஆணையின்வண்ணம் அப்போது துறவறத்தை மேற்கோள்ளவில்லை. ஆனுலும் உள்ளத்தால் துறவியாகவே ஆனுர். அவரது கட்டழகில் உள்ளத்தைக் கோடுத்த அரசமாதேவி அவரைத் தகாத ஒழுக்கத்தில் ஈடு படுத்த முயன்ருர். தாயுமானுர் அரசிக்கு நல்லறிவு புகட்டி

அரண்மனையினின்றும் வெளிக்கிளம்பினர். தாயுமானரின் சிறிய தாய்ப் புதல்வராகிய அருளைய பிள்ளை தாயுமானருடன் சென்றார். பல தலங்களுக்கும் சென்று வழிபாடியற்றி அருட்பாடல்கள் பலவற்றைப் பாடிய தாயுமானர் திருமறைக்காட்டினை அடைந்தார். மௌனகுருவின் ஆணையின்வண்ணம் மட்டுவார்குழலி என்னும் மங்கை நல்லாரை மணந்து ஓர் ஆண் மகவினையும் பெற்றார். எவ்வளவுதான் அவர் உலக இன்பங்களில் ஈடுபட்டவராகப் புறக்காட்சிக்குப் புலப்படினும் அகத்தால் அத்துவிதச் சிவானுபவச் செல்வராகிய சீவன் முத்தராகவே யிருந்தார்.

அண்ணனும் மனைவியும் இவ்வுலக வாழ்வினை விடுத்த பின்னர் தாயுமானர் முற்றுந்துறந்த முனிவராகி மீண்டும் திருச்சிமலையினையடைந்து தன் குருநாதனை வணங்கினர். பின்னர் பல தலங்களுக்கும் சென்று இறுதியாக இராமநாதபுரத்தினையடைந்து அதன்கீழ்பால் இருந்த காட்டூரணி என்னும் தனியிடத்தில் ஒரு புளியமரத்தடியில் நிட்டைகூடி இறைவனோடு இரண்டறக் கலந்தார். அவர் முத்தியடைந்த நாள் சாலிவாகனசகாப்தம் 1583. (கி. பி. 1661) சுபகிருது ஆண்டு தைமாதம் திங்கட்கிழமை விசாகநாள் ஆகும். தாயுமானா பாடிய பாடல்கள் 1452 ஆகும்.

பாடல்களின் பாங்கு :

தாயுமான சுவாமிகளின் பாடல்கள் படிப்பவரது உள்ளத்தில் பக்திச் சுவையை ஊட்டுவன. வடசொற்களும் தென்றமிழ்ச் சொற்களும் விரவி ஒளிர்வன. சாத்திர உண்மைகளைப் புலப்படுத்துவன. அவருக்கு முன் வாழ்ந்த மூவர் தேவாரத்தின் சிறப்பை விளக்குவன. அருணகிரியார், சிவவாக்கியர், திருமூலர், பட்டினத்தார், மாணிக்கவாசகர், மெய்கண்டார், அருணந்திசிவாசாரியார் போன்ற பெரியோர்களைப் பாராட்டுவன.

(தொடரும்)

பன்னெறி விளக்கம்

பெருநாவலர், சே. செல்வப்ப முதலியார்

மானமுள்ளா ரிழிவோன் றுறிலாவி வழங்க வஞ்சார்
ஞானமுள்ளா ரிடர்கோடி வந்தாலு நடுக்கமெய்தார்
தானமுள்ளார் கள்வர்கோள்வர்தம் பொன்னெனச் சற்றுமெண்ணார்
ஈனமுள்ளார் நம்பிவைத்த சொத்தைப் பின்னரேதென்பார். 84

செய்திகள்

தருமையாதீனத்தில் :

ஸ்ரீ ஞானபுரீசுவரர் மகோற்சவம்

பிலவ ஆண்டு வைகாசித்திங்கள் 13ஆம் நாள் (26-5-61) வெள்ளிக்கிழமை முதல் 22 ஆம் நாள் முடிய (4—6—61) உள்ள நாட்களில் ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞான்புரீசுவர சுவாமிக்கு மகோற்சவம் சிறப்பாக நடைபேற்றது. 30-5-61 அன்று சகோபுர ரிஷப வாகனக் காட்சியும், 1-6-61 அன்று திருக்கல்யாணமும், 3-6-61 அன்று திருத்தேர் வீதியுலாவும் நிகழ்ந்தன.

திருக்கல்யாணத் திருநாளன்று மின்விளக்குகளால் ஒப்பனை செய்யப்பெற்ற வெள்ளிரதக் காட்சி 'இறைவன் ஜோதி வடிவினன்' என்பதை உணர்த்துவதாக இருந்தது. திருவிழா நாட்களில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். மாயூரம் முதலிய பல நகரங்களிலிருந்தும் பெருமக்கள் பலர் வந்து தரிசித்தனர். திருக்கல்யாணத் திருநாளன்றும், குருபூஜைத் திருநாளன்றும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருநீறு முதலிய பிரசாதங்கள் வைக்கப்பெற்ற பைகளை அன்பர்களுக்கு வழங்கினார்கள். விழா நாட்களில் விசேஷ நாதஸ்வரக் கச்சேரிகளும் வேத சிவாகம பாடசாலை ஆசிரியர், மாணவர்களால் வேத பாராயணமும், ஆதீன தேவஸ்தானங்களின் ஓதுவாமூர்த்திகளாலும், ஆதீன தேவார பாடசாலை ஆசிரியர் மாணவர்களாலும் தக்க பக்க வாத்தியங்களுடன் திருமுறைப் பாராயணமும் செய்யப்பெற்றன. இத்திருநாளை யோட்டி திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும் சிவஞான சித்தியார் பாட வகுப்பும் சிறப்புற நிகழ்ந்தன.

குருபூஜை விழா

4—6—61 ஞாயிற்றுக்கிழமையன்று தருமையாதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜைவிழா மிக்க சிறப்புடன் நிகழ்ந்தது. அன்று காலை 6 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் குருமூர்த்த தரிசனத்திற்கு எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். பின்னர் தமது ஆன்மார்த்தமூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு அபிஷேக அலங்கார ஆராதனைகள் செய்து உள்நெக்குருகி வழிபட்டார்கள். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் வழிபாட்டிற்கு எழுந்தருளி வழிபட்டார்கள். அன்பர்கள் பலரும் திரளாகக்கூடி வழிபட்டு உய்ந்தனர். திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டமான் M. A., I. A. S., அவர்கள் "வேங்கடமுதல் குமரிவரை" என்ற நூலை (இரண்டாம் தொகுதி) ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களுக்குச் சமர்ப்பித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் தொண்டமான் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்துச் சிறப்பித்தார்கள்.

ஸ்ரீ ஞானபுரீசுவரர், ஸ்ரீ ஞானாம்பிகை, ஸ்ரீ துர்க்காம்பிகை ஆகிய மூர்த்திகளுக்கு 26-5-61 முதல் தொடங்கி நடைபெற்ற லக்ஷார்ச்சனைபூர்த்திவிழாவும் நடைபெற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறப்புற நிகழ்ந்தன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளும் எழுந்தருளி வழிபட்டார்கள்.

மாலை 6 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள் காவிரித் திருமஞ்சனத்திற்கு அன்பர்கள் புடைசூழ எழுந்தருளியபின் ஸ்ரீ சொக்கநாதர் வழிபாட்டையும் நிகழ்த்தினார்கள்.

5—6—61 திங்கட்கிழமையன்று பட்டணப்பிரவேசத் திருநாள். அன்று காலை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் தமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் பூஜையை முடித்து அடியார்களுக்கு மாகேஸ்வர பூஜை முதலியன செய்வித்தருளினார்கள். அன்று இரவு

10 மணி அளவில் வழிபாடுகளை முடித்துக்கொண்டு சிவிகையில் ஆரோகணித்தார்கள். சிவிகை மக்கள் கூட்டத்திடையே மெல்ல ஊர்ந்து சென்றது. விசேஷ மேள வாத்தியங்கள் முழங்கின. அதிர்வேட்டுகள் அதிர்ந்தன. வாணவேடிக்கைகள் நிகழ்ந்தன. இரவு 3 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் கொலுக்காட்சி வழங்கி ஆசியருளினார்கள். அன்பர்கள் தரிசித்து உய்ந்தனர்.

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக சுவாமிகள் குருபூஜை விழா

தருமையாதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா 23—5—61 அன்று சிறப்புற நிகழ்ந்தது. இரவு வழிபாட்டிற்குப் பலவகையான பழங்களும், தேங்காய் முதலியனவும் வைக்கப்பெற்ற இருபத்துநான்கு தட்டுகளை அன்பர்கள்எடுத்துக் கொண்டு மேள வாத்தியத்துடன் குருமூர்த்த ஆலயத்திற்குச் சென்றனர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் காலை மாலை இருவேளைகளிலும் வழிபாட்டிற்கு எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். அன்பர்களுக்குப் பிரசாதம் முதலியன வழங்கப்பெற்றன. கயிலை சென்ற அருளாளர்கள் பற்றிய சொற்பொழிவு காலை மாலை இருவேளைகளிலும் நடைபெற்றன. இரவு பித்துக்கொளி முருகதாஸ் அவர்களின் இன்னிசைச் சொற்பொழிவும் நிகழ்ந்தது.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

திருவதிகை முதலிய தலங்களில்

சமயப் பிரசார வழிபாடு

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் மாதாந்திர சமயப்பிரசார வழிபாடு 14-5-61 ஞாயிறன்று திருவதிகை வீரட்டானம், திருவாமூர், திருநாவலூர், திருமுண்டீச்சுரம், திருவெண்ணெய்நல்லூர் ஆகிய தலங்களில் சிறப்பாக நடைபெற்றது. வழிபாட்டுக்குழுவினர் ஊர்திகள் மூலம் முன்னாள் இரவே திருவதிகை சேர்ந்தனர். விடியலில் கெடிலநதியில் நீராடி காலை 7மணிக்கு ஸ்ரீ வீரட்டானேசுவரர் ஆலயத்தில்

வழிபாடு நிகழ்த்தினர். ஸ்தலத் தேவாரப் பதிகம் பதினேட்டிணையும் சுவாமி சந்நிதியில் நிலையத் திருமுறைவகுப்பு ஆசிரியர் திரு. பி. சுவாமிநாதன் அவர்களும் திருவதிகை வித்துவான். திரு. சண்முகசுந்தர தேசிகரவர்களும் உளம் உருகி ஓதினர்கள்.

திருவதிகை மனவாசகங்கடந்தார் திருமுறைப்பள்ளி ஆசிரியரும், மாணவர்களும், திருக்கோயில் அறங்காவலர்களும் சிவாசாரியர்களும் அருள்நேறிக் கழகத்தினரும் பூர்ணகும்ப மரியாதையுடன் குழுவினரை வரவேற்று உடனிருந்து தரிசனம் செய்து வைத்தார்கள். திருமுறைப் பாடசாலை மாணவர்களும் குழுவினரும் சிவபுராணம் ஓதிக்கோண்டே திருக்கோயில் வலம் வந்து வழிபாடாற்றினர். வழிபாட்டின் பின்னர் நடராஜர் மண்டபத்தில் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில் சமயப் பிரசாரக் கூட்டமும், நடுநாட்டுத் தல யாத்திரைத் தோடக்கமும் நடைபெற்றன. ருக்மணி குக்தர் உரிமையாளர் திரு. அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் விழாவைத் தோடங்கிவைத்தார்கள். அடக்கம் அன்பு, ஆசாரம், அருள் உணர்வு இவையெல்லாம் குறைந்துவரும் இக்காலத்தில் மாதந்தோறும் பாடல்பெற்ற கோயில்களில் வழிபாடு நிகழ்த்தி வழிபாட்டினுல் விளையும் நலங்களை மக்கட்கு அறிவுறுத்துவது இக்காலத்திற்குச் செய்யும் சிறந்த தோண்டாகும் என்று தலைவர் குறிப்பிட்டார்கள். தோடக்க உரையாற்றிய சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் தருமையாதீனமும். அதன் ஆணைவழி சமயப் பிரசார நிலையமும் காலத்திற்கு ஏற்ற சமயத்தோண்டுகள் பல செய்து வருவதைப் பாராட்டி அப்பர் சுவாமிகள் அருள் பேற்ற இத்தலத்தில் நடுநாட்டு யாத்திரை தோடங்குவது மிகவும் போருத்தம் என்று குறிப்பிட்டார்கள். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வாழ்த்துரை கூறுகையில் நடு நாடு சமயாசாரியர்களுள் இருவரும் சந்தான சாரியர்களுள் மூவரும் அவதரித்த சிறப்புடையது என்றும், முப்புரம் எரித்த இத் தலத்தில் நடுநாட்டு யாத்திரை தோடங்குவது நம்மிடமும் பிறரிடமும் உள்ள தீயசக்திகள் நீங்கும் என்பதைப் புலப்படுத்துகிறது என்றும் குறிப்பிட்டார்கள். குழுவினர் சார்பில் திரு. ச. சிவகுமாரன் அவர்களும், தேவாலயச் சார்பில் திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்களும் நன்றி நவின்றார்கள். பண்ருட்டி அருள்நேறிக்கழகத்தார் வழிபாட்டுக் குழுவினர்க்குச்

சிற்றுண்டி அளித்து உபசரித்தார்கள். மேயர் கம்பெனி மாசிலாமணி முதலியார் அவர்கள் திருவதிகை. திருநாவலூர்த் திருப்பதிகங்கள் அடங்கிய புத்தகங்களை அன்பர்கட்கு அன்பளிப்பாக வழங்கினார்கள்.

பிறகு வழிபாட்டுக் குழுவினர் அப்பர் சுவாமிகளின் அவதாரத் தலமாகிய திருவாமூர் ஸ்ரீ பசுபதீசுவரர் தேவஸ்தானத்தில் வழிபாடாற்றினர். அப்பர் சுவாமிகள் அவதாரம் செய்த இடத்தில் கட்டப்பெற்று வரும் அப்பர்சுவாமிகள் திருமடத்திற்குச் சென்று தரிசித்தனர். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தெய்வநெறி சிவம்பெருக்கும் திருவாமூரின் சிறப்புப் பற்றியும், நமது ஆசாரியர்களுள் ஒருவராகிய நாவுக்கரசர் அவதாரத்தலத்தில் அவரது மடாலயம் சிறந்த முறையில் திகழ சைவமக்கள் தங்களாலியன்ற காணிக்கை செலுத்த வேண்டுமென்றும் கூறினார்கள். அப்பர் சுவாமிகள் திருமடம் திருப்பணிக் கமிட்டியாரும், திருக்கோயில் அறங்காவலர்களும் குழுவினரை வரவேற்று வழிபாடு செய்து வைத்தனர்.

அடுத்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவதரித்தத் திருநாவலூருக்குச் சென்றனர். ஸ்ரீ பக்தஜனேஸ்வரர் ஆலயத்தில் ஆலய அறங்காவலர்களும் சிவாசாரியப் பெருமக்களும், ஊர்ப் பொதுமக்களும் பூர்ணகும்ப மரியாதையுடன் குழுவினரை வரவேற்று சுவாமிதரிசனம் செய்து வைத்தார்கள். குழுவினர் சிவபுராணம் ஓதிக்கொண்டே திருக்கோயில் வலம் வந்து ஒவ்வொரு சந்நிதியிலும் வழிபாடாற்றினர். சுவாமி சந்நிதியில் திரு. பி. சுவாமிநாதன் அவ்வூர்த் தேவாரப் பதிகத்தை ஓதினார். திருநாவலூர் மிராசுதார் திரு. மாணிக்கம் பிள்ளை அவர்கள் குழுவினருக்கு மாகேஸ்வரபூஜை செய்வித்து உபசரித்தார்கள். மாலை 3½ மணிக்கு திருக்கோவிலின் முன்னர் அமைக்கப்பட்டுள்ள காவணத்தில் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சமயப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. திரு. என். ஆர். முருகவேள், திரு. ச. சிவகுமாரன், திரு. சச்சிதானந்தம் பிள்ளை, திருமதி, எம். இ. சரஸ்வதி அம்மையார் ஆகியோர் சமய ஒழுக்கம் பற்றியும் வழிபாட்டின் அவசியம் பற்றியும் விரிவுரையாற்றினார்கள். சுவாமிகள் தலைமையுரையில் சைவர்கள் ஆசாரியர்களாகக் கொள்ளத் தக்கவர்கள் நாவரசர்,

ஞானசம்பந்தர் முதலியவர்கள் தாமேன்றும், தோழத்தக்க அடியார்கள் நாயன்மார்களே என்றும் நமக்கு அறிவித்தவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளே என்றும் அவர் அவதரித்த இடத்தில் மடாலயங்கட்ட சிவாசாரியர்கள் முயன்று வருவது போற்றத் தக்கது என்றும், சமய வளர்ச்சிக்கு அடிப்படை சமயாசாரியார் களைத் தக்க முறையில் போற்றுதலே என்றும் குறிப்பிட்டார்கள்.

பிறகு குழுவினர் திருமுண்டீச்சுரம் என்ற தலத்திற்குச் சென்று திருத்தொண்டத்தொகை ஓதிக்கொண்டே திருக்கோயில் வலம் வந்து வழிபட்டனர். சுவாமி சந்நிதியில் அத்தலத் தேவாரத்தை திரு. பி. சுவாமிநாதன் இசையோடு ஓதி இறைவழி பாட்டைச் சிறப்பித்தார். ஊர்ப்பொதுமக்கள்பலரும் வழிபாட்டில் கலந்து பயனடைந்தார்கள்.

பிறகு குழுவினர் திருவெண்ணைநல்லூர் சென்று அருட்டுறை ஆலயத்தை அடைந்தனர். திரு. சி. பாலசுப்பிரமணியம் செட்டியார் அவர்கள், அறங்காவலர்கள், சிவாசாரியர்கள் ஊர்ப்பொதுமக்கள் ஆகியோர் பூர்ணகும்ப மரியாதையுடன் குழுவினரை வரவேற்றனர். குழுவினர் ஒவ்வொரு சந்நிதியிலும் தேவாரம் பாடி வழிபாடாற்றினர். சுவாமி சந்நிதியில் திரு. பி. சுவாமிநாதன் பித்தாபிறைசூடி என்று அவ்வூர்த் தேவாரப் பதிகத்தை ஓதினார்கள். வழிபாடு நிகழ்ந்தபின்னர் திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில் திருவெண்ணெய் நல்லூர் உயர்நிலைப்பள்ளித்தமிழாசிரியரும், திரு. ச. சிவகுமாரன் அவர்களும் சுந்தரர் செந்தமிழ் பற்றியும், வெண்ணெய்நல்லூர் சிறப்புப் பற்றியும் விரிவுரையாற்றினார்கள்.

வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வாழ்த்துரை கூறுங்கால் அடுத்தமாத வழிபாடு 18-6-61 ஞாயிற்றுக்கிழமையன்று திருப்புறவார்பனங்காட்டூர், திருவாமாத்தூர், திருத்துறையூர் முதலிய தலங்களில் நடை பெறும் என்று அறிவித்தார்கள். குழுவினர் பிறகு ஸ்ரீ மெய் கண்டார் மடாலயம் சென்று வழிபாடாற்றினர். திரு. சி. பாலசுப்பிரமணிய செட்டியார் அவர்கள் அருட்டுறை ஆலயத் திலும் ஸ்ரீ மெய்கண்டார் மடாலயத்திலும் விசேஷ ஆராதனை செய்து வைத்தும் குழுவினருக்கு உணவளித்தும் உபசரித் தார்கள்.

காஞட்டுமுள்ளூர் வழிபாடு

21—5—61 ஞாயிற்றுக்கிழமை காஞட்டுமுள்ளூர் வழிபாட்டிற்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளினுர்கள். வழியில் தில்லை ஸ்ரீ நடராஜப் பெருமானையும், ஸ்ரீ கோவிந்தராசப்பெருமாளையும் அத்திருக்கோயிலில் புதிதாகக் கண்டு எடுக்கப்பட்ட ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தியையும் தரிசித்தார்கள். அங்குப் போது தீக்ஷிதர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களைப் பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்று உபசரித்தார்கள்.

வழிநெடுகிலும் பொதுமக்கள் பலர் குழுமியிருந்து பூர்ண கும்ப மரியாதைகளுடன் வரவேற்று வணங்கினுர்கள். கீழ வன்னியூரில் பொதுமக்களும், திருநாரையூரில் தர்மகர்த்தா ரத்தினசபாபதிபிள்ளை தலைமையில் பொதுமக்களும் வரவேற்ருர்கள். ஊர்எல்லையில் பொதுமக்கள் பலர்கூடியிருந்து வரவேற்று காட்டுமன்னுர்குடிக்கு அழைத்துச்சென்ருர்கள். நாட்டுச்சின்னப் பண்ணை திரு. M. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களுக்குப் பூர்ணகும்ப மரியாதைகள் செய்து வரவேற்றுபசரித்தார்கள்.

காட்டுமன்னுர்குடியிலிருந்து காஞட்டுமுள்ளுருக்கு எழுந்தருளும்போது உடையார்குடியில் அகோரபத்தர் தலைமையிலும், கலைமகள் பள்ளி நிர்வாகி நடனசபேசம் பிள்ளை, சிவன்கோயில் வார வழிபாட்டுக் கழகத்தார், ரேத்தினசபாபதிச் செட்டியார், வேங்கடாசலம்பிள்ளை, செட்டித்தெரு சிவப்பிரகாசம்செட்டியார், பெரியபண்ணை இராஜகோபால் பிள்ளை, பெரியபண்ணை சோம சுந்தரம் பிள்ளை, முத்துவேலாயுதம் செட்டியார், கந்தசாமிச் செட்டியார், சுந்தரேசம் பிள்ளை, ஞானவிநாயகர்கோயில் விஸ்வ நாதம் பிள்ளை முதலியவர்களால்வரவேற்புகள்அளிக்கப்பட்டன.

திருக்காஞட்டுமுள்ளூர் ஸ்ரீ பதஞ்சலீஸ்வரசுவாமி திருக் கோயிலுக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளியதும், தேவஸ்தானம் டிரஸ்டி சீ. சம்பந்தம் பிள்ளை முதலியவர் பூர்ணகும்ப மரியாதைகளுடன் ஆலயத்திற்கு அழைத்துச்சென்று தரிசனம் செய்துவைத்து உபசரித்தனர்.

தரிசனத்துக்கு பின்னர் ஒரு கூட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களுக்கு தேவஸ்தானச் சார்பாக தர்மகர்த்தா திரு. சீ. சம்பந்தம் பிள்ளை அவர்களும், ஊரினர் சார்பாக, திரு. K. M. ஞானதேசிகம் பிள்ளை அவர்களும் வரவேற்பிதழ்கள் வாசித்தளித்தனர். காணுட்டுமுள்ளுருக்கு வாரவழிபாட்டிற்கு வந்திருந்த மாயூரம், தருமை ஸ்ரீகுருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகத்தினருக்கும் வரவேற்பு அளித்தனர். பின்னர் திரு. K. M. ஞானதேசிகம் பிள்ளை அவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் ஆட்சிச் சிறப்பையும், அவர்கள் காலத்தில் செய்யப்பெறுகின்ற வழிபாட்டு முறைகளையும்பற்றிச் சிறப்பித்துப் பேசினுர்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் மக்கள் வழிபாட்டில் ஈடுபடவேண்டும், இறைபணி செய்யவேண்டும். திருக்கோயிற் திருப்பணிகள் செம்மையுற நிகழ உதவவேண்டும். செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம். அதுவே நிலைத்து நிற்பது. என்று ஆசியருளினுர்கள். கடவுள் வாழ்த்துடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது. காட்டுமன்னுர்குடி நாட்டுச்சின்னபண்ணை உயர்திரு M. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் சாந்தமே சோருபமானவர்கள். இன்முகத்தோடு விளங்கும் தன்மையுடையவர்கள். இனியமொழி பேசும் இயல்பினர். 'எண்ணித் துணிக கருமம்' என்பதற்கேற்ப எண்ணிச்சேய்யும் செயற்றிறம் உடையவர்கள், அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் காட்டுமன்னுர்குடிக்கு எழுந்தருளினுர்கள்.

மாலை 4 மணியளவில் காட்டுமன்னுர்குடியில் நாட்டுச் சின்னப்பண்ணை திரு. M. இராமலிங்கம் பிள்ளையவர்கள் தமது பங்களாவில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களை கோலுவிலிருத்தி வழிபாடு செய்தார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும் கோலுக்காட்சி வழங்கி ஆசி அருளினுர்கள். அன்பர்கள் பலர் கோலுக்காட்சியைத் தரிசித்து மகிழ்ந்தனர்.

கோலுவழிபாட்டின்போது அன்பர்கள் பலர் வரவேற்பிதழ்கள் வாசித்தளித்தனர். காட்டுமன்னுர்குடி நாட்டுச் சின்னப்பண்ணை திரு. M. இராமலிங்கம் பிள்ளை, உடையார்குடி வார வழிபாட்டுக்கழகத்தினர், திரு. M. விசுவநாதம் பிள்ளை, உடையார்குடி காங்கிரஸ் கமிட்டி, கலைமகள் பள்ளி ஸ்தாபனம்,

விஸ்வகர்ம சங்கத்தினர், செங்குந்த முதலியார்கள், ஆதீனம் அடிநிலக்குடி மக்கள் முதலியவர்கள் வரவேற்பிதழ்கள் வாசித்து அளித்தனர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் அருளுரைக்குப் பின்னர் நன்றியுரை கடவுள் வாழ்த்துடன் வழிபாடு நிறைவெய்தியது.

வீரநாராயணன் ஏரி என்பது வீரணத்தம் ஏறி என மருவி வழங்குகின்றது. இது முதலாம் இராஜேந்திரசோழன் காலத்தில் சிறந்து விளங்கியது. சோழகங்கம் என்னும் ஏரிக்கு வடிகாலாக இருந்தது. இதன் பாசனம் தற்போழுதும் மிக்க பயனுடையதாகவுள்ளது. இதற்குக் கோள்ளிடத்தில் இருந்து தண்ணீர் விடப்படுகிறது. இதன் நீளம் 7 மைல். அகலம் 4 மைல்.

வீரணத்தம் ஏரியில் தேப்பம் கண்டோர் கண்களைக்கவரும் வண்ணம் கவினுற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களை ஆரோகணிக்க செய்து பட்டணப்பிரவேசம் போல தேப்பத்தில் எழுந்தருளச் செய்தார்கள். தேப்பத்திலேயே ஒருபக்கம் நாதஸ்வர இன்னிசை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒருபக்கம் திருமுறை முழக்கம் (திருக்கோள்ளம்பூதூர்ப் பதிகம் முதலிய பதிகப் பாராயணம்) நிகழ்ந்தது. மற்றொருபக்கம் சோற்போழிவுகளும் நிகழ்ந்தன இந்த நிகழ்ச்சிகள், 'இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால், இருக்கோடு தோத்திரம் இய்ம்பினர் ஒருபால்' என்ற பாடலை நினைவுறுத்துகின்றன. சிதம்பரம் டாக்டர் திரு. அரங்கசாமிப் பிள்ளை அவர்கள் குருவழிபாட்டின் இன்றியமையாமையைப் பற்றி இனிய தமிழில் பேசினார்கள். மாயூரம் வார வழிபாட்டுக் கழகச் செயலாளர் திரு: கே. கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை அவர்களும் அரியதோரு சோற்பெருக்காற்றினார்கள். போலீஸ் சூப்பரிண்டேண்ட், திரு. பரமகுரு அவர்கள் சாதுக்களின் மகிமையைப்பற்றிக் குறிப்பிடும்போது 'அவர்களது சக்தி நமது நாட்டவர்களுக்குத் தேரியவில்லை. அமேரிக்காவில் அறுவை சிகிச்சை செய்யும் டாக்டர் ஒருவர் பனிபடர் இமயச் சிகரத்திற்குச் சேன்றார். அவர் தமது குறிப்பில் சாதுக்களின் சிறப்பைக் குறித்துள்ளார். அதில் ஒரு சாது ஆடை முதலியன இல்லாமல் குளிரையும் போருட்படுத்தாமல் படுத்துக்கிடந்தார். அவரது தோற்றம் அந்த டாக்டருக்கு இறந்தவர்போல் இருந்தது. இருப்பினும் பனியாலும், குளிரினாலும் துன்புறும்

இச்சாதுவிற்குத் தம்மிடம் உள்ள குளிர்போக்கும் - உஷ்ணத்தை ஊட்டும் ஊசி ஒன்று போடவேண்டும் என்று எண்ணிச்செய்தார். அப்போழுது அம்மகான் கண் திறந்துபார்த்தார். அக்கண் ணொளி திடீரேன்று ஒரு பேரிய வேளிச்சத்தை உண்டு பண்ணியது. மேலும் தன்னுடைய உலகியல் அறிவையும் போக்கி உண்மை ஞானத்தை அருளுவதாக இருந்தது' என்று குறித்துள்ளார். அத்தகைய மகிமை படைத்தவர்கள் நமது குருமகாசந்நிதானம் என்று கூறிஞர்கள்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Panchanathiswaraswami Devasthanam, Tiruvaiyaru.

To visit any well kept temple for Viswarupa Dharsan in the small hours of the morning during the month of Margali is a rare previlege which I had the pleasure of enjoying these two days in the Panchanatheeswaraswamy temple at Tiruvaiyaru. The Tiruppavai songs and the morning Bhajan and the Thevaram songs by the Oduvar and the punctuality thoroughness in details withwhichthe early morning whorship is done in the temple, added greatly to the spiritual atmosphere and screneity of the temple. The management of the temple deserve the special thanks of the Public for the uniform courtesy and kindness with which the rank and file of the Public are received and treated by all the staff. The cleanliness in the temple and the punctuality in the carrying out of the routine rituals as well as special festivals like the Sri Manickavachagar festival going on now under the direct personal supervision of the Kattalai Swamigal and the Superintendent speak volumes to the grip maintained over the temple servants and the excellency dicipline maintained by the authorities.

(Sd.) S. V. Aiyar,
Advocate, High Court, of Madras
Founder Secretary, Sivananda Saraswathi Sevashram,
Mangalapure, Kattuppakkam (R. S.)
22—12—1960.

*வரவேற்புமலர்

ஔவையார் திருவாக்குப்படி 30 ஆம் வயதில் மூன்றும் அற்று ஒரு பொருளையே நாட வல்லமை கொண்டு, பின்பே பட்டம் ஏற்ற பட்டத்தரசே வருக! வருக!

அருளாட்சி ஏற்றதும், முதற்கண்ணாக முன்னிருந்த குரு மூர்த்திகளின் திருவுள்ளமுணர்ந்து, அவைகளைப் பூர்த்தி செய் வித்த அண்ணலே வருக!

பூலோககைலாசத்திற்கே எழுந்தருளி கயிலைமலையானைத் தரிசனம் செய்தும், துவாதச ஜோதிர்லிங்க தரிசனம் செய்தும், ஒன்பது நாட்டு அன்பர்களால் கனகாபிஷேகம் செய்விக்கப் பட்ட ஞானபீடத்தரசே வருக! வருக!

ஆட்சி திருக்கோயில்கள், திருமடங்கள் உள்பட உயர்தர நிர்வாகமும், வடமொழி, தென்மொழியை செழும் பயிராக்கிப் பெருக்கி அருளிவரும் எங்கள் ஐயனே வருக! வருக!

மாயூரத்தில் மகப்பேறு நிலையம் அமைத்தும், தலைநகரில் திருமடம் நிறுவியும், சைவ சமயத்தை பரவச் செய்தும், சைவ சித்தாந்தக் கல்லூரி அமைத்தும், நாடிவரும் அன்பர்களுக்குத் தேவையை வழங்கி வரும் எங்கள் மாணிக்கமே வருக!

அலுவலரை அன்புடன் ஆதரித்துத் திறம்பட ஆட்சியைக் காட்சியளிக்கச் செய்யும் அருள் அரசே வருக!

திருப்பணி, கும்பாபிஷேகம், கோடியர்ச்சனை, மகாபிஷேகம், புஷ்பாஞ்சலி ஆகியன செய்து, அன்பர்களைக்கூட்டி அருள்பெற ஆசி அருளி வருவதைக் கடமையாகக் கொண்ட ஆற்றலே வருக!

அன்பர்களுக்குப் பொருமை, ஆணவம், முதலிய கடும் வியாதிகளை நாடவிடாமலும், ஒழுக்கம், ஒற்றுமை, நிம்மதியான வாழ்க்கை முதலியன பெறவும், ஆண்டவனிடம் நன்றி செலுத்த வும் நேர்ந்தவைகளையும், தேவைகளையும் தெரிவித்துப் பலன்

---

* 21—5—1961 இல் காட்டுமன்னார்குடிக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் எழுந்தருளியபோது, காட்டுமன்னார்குடி நாட்டுச்சின்னப்பண்ணை திரு. மு. இராமலிங்கம்பிள்ளை அவர்கள் சமர்ப்பித்தது.

பெறவும், திருவுள்ளம் கொண்டு, மூலவர் பெயரால் 51 அன்பர்கள் கொண்ட குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகக் குழு உண்டாக்கித் திருக்கோயில்கள் தோறும் வழிபாடு செய்து, சைவர் திருந்த, சைவம் ஓங்க, ஆலின் வித்திட்டு, விழுதிட்ட ஆலமரம்போல் வளர்ந்து அன்பர்களுக்கு இடம்தர அருளிய தருமை ஞானகுருவே வருக!

தினசரி நியம நிட்டையும், பூசையும், வாராதி விரதமும் மௌன விரதமும் சஷ்டி முதலிய பல கடும் விரதங்களும் அனுஷ்டித்து வரும் வீர வேந்தரே வருக !

ஜாதி, மதம், எளியார், வலியார், பல கொள்கைகள் உடையார், பண்டிதர் பாமரர் என்ற பாகுபாடின்றி அருளாசி வழங்கியும், எவர்களின் மனமும் பக்குவமடையச் செய்தும் எந்தப் பொருள்பற்றியும் பெருங்கூட்டத்தில் கேட்டவரைக் கட்டுதலும், கேளாதவரை விருப்பம் உண்டாக்குதலும் ஆகிய உரையாற்றியும் வரும் தவராஜ சிங்கமே வருக !

பாரதத்தில் உள்ள சோழ நாடு, பாண்டி நாடு, ஈழ நாடு, மலை நாடு, கொங்கு நாடு, துளுவ நாடு, வட நாடு, தொண்டை நாடு, நடு நாடு ஆகிய நாட்டவர்களின் அன்பைப் பெற்றிருப்பதை அந்தந்த நாட்டு அன்பர்கள் கூடிக் குவிந்து செய்த கனகாபிஷேக வாயிலாகக் காட்டுவித்த சிவஞானக் கதிரோனே வருக !

தங்களின் வருகையை ஏற்க என்ன புண்ணியம் செய்தோமோ! பெருமையடைகிறோம், மகிழ்கிறோம், போற்றுகிறோம்.

தருமையாதீன ஐயைந்தாம் பட்டத்து அருளரசின் 16 வது ஆண்டின் அருளாட்சி என்றும் பதினாறாக விளங்க எல்லாம் வல்ல சொக்கநாதனை இறைஞ்சி வேண்டுகிறோம்.

கானாட்டுமுள்ளூரில் கண்டு கைதொழ வந்தகாலை அடியேன் பிரார்த்தனையை நிறைவு செய்யத் திருவுள்ளம் கொண்டு எங்கள் இல்லத்திற்கும் எழுந்தருளியதால் என்ன மாதவம் செய்தது இவ்வில்லம் என்று மனமகிழ்ந்து பெருந்தகையாகிய தங்கள் பொன்னார் திருவடிக் கமலங்களுக்கு எங்கள் பலகோடி வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் திருவடிகள் வாழ்க ! வாழ்க ! வாழ்க !

எதிர்காலம் ☞ கே. முத்துஜோதிடர்

(பிலவஹூ ஆனிமீ 1உ முதல் 31உ முடிய)

(15—6—61 முதல் 15—7—61 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும், சுபத்தைத் தரும். அஸாத்ய மேல்லாம் சுலப ஸாத்யமாகும். தொழில் ஏற்றம், நஷ்டதன பிராப்தி. கிரய விக்ரய அபிவிருத்தி, மேலோர் பெரியோர் அன்பு இவைகள் ஸித்திக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

2. ரிஷபம். கார்த்திகை ¾, ரோஹிணி, மிருகசீர்ஷம் ½.

கார்த்திகை 2, 3, பாதங்கள் சம பலனைத் தரும். வரவுக்கு மிஞ்சின செலவும் கார்யவிக்னமும் உண்டுபண்ணும். கார்த்திகை 4-ம் பாதமும், ரோஹிணி நான்கு பாதங்களும், மிருகசீர்ஷம் 1, 2 பாதங்களும் ஜெயத்தைத் தரும், நூதன உத்தியோக லாபமும், இடம் மாறுதலும் ஏற்படச் செய்யும், தூரதேசத்திலிருந்து அழைப்புப் பத்திரம் கிடைக்கும், தொழில் ஓங்கும் வித்தை விருத்தியாகும், குடும்பம் தழைக்கும். புதன், வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீர்ஷம் ½, திருவாதிரை, புனர்பூசம் ¾.

மிருகசீர்ஷம் 3, 4, பாதங்கள் அதிக உழைப்பையும் ஸ்வல்ப லாபத்தையும் தரும். திருவாதிரை நான்கு பாதங்களும் ஆரோக்யத்தை தந்து ஸஞ்சார பலனைத் தரும், வியாதி நீங்கச் செய்யும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் சத்ருமைத்ரத்தை உண்டுபண்ணி, ஒருவருக்கொருவர் ஸ்நேகத்தைத் தரும். வேகு காலமாய் எதிர்பார்த்து நடவாத காரியங்கள் ஸாத்யமாகும், ஆனாலும் விசேஷ விரயங்களும் அதிகமாகும், மனம் சாந்தமடையாது. சனி, செவ்வாய் சுபமாகும்.

4. கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம், ஆயில்யம்.

புனர்பூசம் நான்காம் பாதம் வித்யாவிருத்தியைத் தரும், சிரத்தை மேதை வளர்ச்சி, தீவிரபுத்தி ஆரோக்யம் இவைகளை விருத்திசெய்யும். பூசம் நான்கு பாதங்களும், ஆயில்யம் நான்கு பாதங்களும் மேல் பதவிகளைத் தந்து, எங்கும் நிறைந்த செல்வாக்கையும் கீர்த்தியையும் உண்டுபண்ணும், எல்லோ ரிடத்திலும் அன்பும், உபகாரத்தன்மையும் ஏற்படச்செய்யும். தேய்வ பலம் ஓங்கும், சத்துருக்கள் சரண் அடைவார்கள். வியவஹாரம் ஜெயிக்கும், நஷ்டமான பொருள் தானே வந்து சேரும். ஞாயிறு, வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

மக நக்ஷத்திரம் நான்கு பாதங்களும் இருப்பிடத்திலேயே மேல் பதவியையும் லாபத்தையும் தரும், குடும்பம் ஓங்கும். வாஹனாதி யோகங்கள் ஏற்படச்செய்யும். பூரம் நான்கு பாதங் களும், உத்திரம் முதல் பாதமும் ஆரோக்யக்குறைவு ஏற்படச் செய்யும், வைத்யச் செலவு அதிகமாகும், குடும்பம் கலவரப் படும், மனம் சாந்தி அடையாது. செவ்வாய், புதன் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்யா ராசி 9 பாதங்களும், மகத்தான வைபத்தையும் விவாஹாதி சுபங்களையும் உலக பிரஸித்தியையும் தரும். அடிக் கடி ஸஞ்சார பலனை உண்டுபண்ணும் தேய்வபலம் ஓங்கி நிற்கும், சென்ற இடமெல்லாம் சிறப்பும் கீர்த்தியும், நன்கொடை களும் கொடுக்கச் செய்யும், இல்லற சுகம் ஓங்கும், மேலோர் பெரியோர் அன்பும் தரிசனமும் கிடைக்கும். அஸாத்யமெல்லாம் சுலபஸாத்யமாகும். புதன், வியாழன் சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்கள் சம பலனைத் தரும். ஆரோக்யக் குறைவும். வீண் விரயங்களும் ஏற்படச்செய்யும். சுவாதி நான்கு பாதங்களும் உத்தியோக உயர்வை உண்டுபண்ணும், பொது மக்களின் சேவையும் எங்கும் நிறைந்த கீர்த்தியும் தரும். தேய்வ பலம் முன்நின்று ஓங்கச்செய்யும், நினைத்ததெல்லாம் கைகூடும்.

விசாகம் 1, 2, 3 பாதங்கள் விசேஷ பணச்செலவின்பேரில் ஸகல காரியங்களையும் ஸாதித்துத்தரும். சரீரத்தில் எதிர்பாராத ரிணம் ஏற்படச்செய்யும், வாஹனக் குறைவும் காலிகன்றுக் குறைவும் ஏற்படச் செய்யும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$ அனுஷம், கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் அதிக உழைப்பின்பேரில் விசேஷ லாபத்தைத் தரும், ஆடை ஆபரணச் சேர்க்கைகள் ஏற்படச்செய்யும், உத்தியோகம் ஓங்கும், விவஸாய பலன் அதிகரிக்கும், வாஹன விருத்தி ஏற்படச் செய்யும். சனி, புதன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் நான்கு பாதங்களும் கவலையோடு ஒடிக்கொண்டு இருக்கும். பரோபகாரத்தை நாடி நிற்கும், மனம் மாறுதல் ஏற்பட்டு சமாதானம் ஏற்படச் செய்யும். பூராடம் நான்கு பாதங்களும் இடம் மாறி உத்தியோகத்தில் விசேஷ ஏற்றத்தைத் தரும், மேலோர் பெரியோர் அன்பு கிடைக்கச் செய்யும், அடிக்கடி அலைச்சல்கள் இருந்துகொண்டே இருக்கும், குடும்பம் ஓங்கும் புத்திராதிகளால் நன்மை ஏற்படும். உத்திராடம் முதல் பாதம் கடன் தொல்லை நீங்கி ஸந்தோஷம் ஏற்படச்செய்யும், ஆரோக்யம் உண்டுபண்ணும், புத்திராதிகளால் நன்மை ஏற்படும் சுகவாழ்வு கிட்டச்செய்யும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

உத்திராடம் 2, 3, 4 பாதங்கள் மிச்ர பலனைத் தரும். நினைத்த காரியங்கள் தடைபடச் செய்யும். திருவோணம் நான்கு பாதங்களும், அவிட்டம் 1, 2 பாதங்களும் எதிர்பாராத மேல் பதவிகளைத் தந்து பரம ஸந்தோஷத்தை அநுபவிக்கச்செய்யும் இடம் மாறல் ஏற்பட்டு தொழில் விருத்தியைத் தரும், நினைத்த தெல்லாம் சுலபமாய் நிறைவேறும், தெய்வபலம் முன்நிற்கும். திங்கள், புதன் சுபமாகும்.

11 கும்பம். அவிட்டம் ½, சதயம் - பூரட்டாதி ¾

கும்பராசி 9 பாதங்களும் நூதன கிரஹ லாபத்தைத் தந்து வாஹனாதி யோகங்களேயும், ஆடை ஆபரணச் சேர்க்கைகளேயும் உன்னத பதவிகளேயும் உண்டுபண்ணும், மனம் ஸதா ஸந்தோஷ ஸாகரத்தில் மூழ்கிநிற்கும். புதன், வெள்ளி சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ¼, உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மஹத்தான வைபவத்தைத் தரும் கிரஹ விச்ரய லாபத்தை உண்டுபண்ணும். எங்கும் நிறைந்த கீர்த்தியையும், விசேஷ சுகபோகங்களேயும் ஸ்திரவாஸத்தையும் தரும், நஷ்டமான பொருள்கள் தானே வந்துசேரும், உத்தி யோக உயர்வும் கீர்த்திபத்திரமும் கிடைக்கச்செய்யும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :-

மேற்படி ஆனிமாதம் உலகில் அநேகம் மாறுதல்களே காட்டும். ஆஸ்திகர்களுக்கும் மனம்மாறி த்வேஷ குரோத புத்திகளே உண்டுபண்ணும், ஈதிபாதைகள் அதிகமாகும். எங்கும் ஸமாதானம் நிலவி, மஹாஜனங்கள் துக்கமில்லாமலும் பய மில்லாமலும் இருந்துகொண்டு சுகவாழ்வு ஏற்பட ஸகல ஸஜ் ஜனங்களும் அவரவர்கள் தன் நிலைமைக்குத் தக்கபடி பரோப காரத்தைச் செய்துகொண்டு த்வேஷபுத்தி இல்லாமலும் எல்லோ ரிடத்திலும் மன ஒற்றுமையுடனும் இருந்துகொண்டு தேச, குல, மத ஆசாரங்களேக் காப்பாற்றிக்கொண்டு ஒவ்வொரு கிராமம் தோறும் ஆங்காங்கு கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவ விஷ்ணு கிராம தேவதாலயங்களில் விசேஷ ஆராதனேகளேச் செய்துகொண்டு மஹாஜனங்கள் ஒன்றுகூடி உலக சுபிக்ஷத் துக்குக் கடவுளேப் பிரார்த்தித்து வர எங்கும் சுபிக்ஷம் நிலவி மஹாஜனங்கள் சுகமடைவார்கள். கடவுள் காப்பார்.